உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பிரமாதீச – சித்திரை – 10—5—73 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## ஆதீனத்திற்கு ஓர் அணிவிழா

### குற்றமும் குணமும் :

உயிர்கள் யாவும் இயற்கையில் குற்றம் உடையனவே, அதற்குக் காரணம் அவை அநாதியே ஆணவமலத்தில் அழுந்தியிருந்தமை. இறைவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கியிருப்பவன். அதனால் அவன் ஒருவனே குற்றம் இல்லாதவன்; குற்றம் இல்லாமையோடு நலங்கள் பலவும் நிரம்ப உடையவன். 'சிவன்' என்னும் திருப்பெயர் இவ்வியல்பு பற்றியே வந்தது.

" குறைவிலா மங்கல குணத்தன் ஆதலின்,
நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன்என அறிவின் மேலவர் "

என்பது காஞ்சிப்புராணம்.

" ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் "

என்றபடி இருளாகிய ஆணவத்திற்கும், ஒளியாகிய இறைவனுக்கும் உயிர் இடமாயுள்ளது. ஆகவே, உயிர்களிடத்தில் காணப்

படும் குற்றங்களுக்கெல்லாம் காரணம் ஆணவமும், அவற்றின் பால் காணப்படும் சில நல்லனவற்றிற்கெல்லாம் காரணம் இறைவனது திருவருளும் என்பது நன்கு விளங்குவதாகும். "கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" என்பதுபோல, உயிர் ஒளியைவிட்டு இருளைப் பற்றுதற்குக் காரணம் அதனது பக்குவக் குறைவே. முதலில் உயிர் இருளைப்பற்றித் துன்புற்றபின்னர் அதனின் நீங்கி ஒளியைப்பற்றி இன்புறும்.

## இருள் நீக்கம் :

இருளில் நின்று துன்புறும் உயிர் தனது நிலையைத் தெரிந்து ஒளியை அடைந்து இன்புற விரும்புவதே 'பக்குவம்' எனப்படும். இத்தகைய உயிருக்கு இறைவனே குருவாக வந்து அஞ்ஞான இருளைப்போக்கி மெய்ஞ்ஞான ஒளியைத்தருகின்றான்.

'குரு' என்பதற்கு, 'அஞ்ஞானத்தைப் போக்குபவன்' என்பதே பொருள். தமிழில் 'ஆசிரியன்' என்பதும், ஆசு - குற்றத்தை; இரியன் - நீக்குபவன்' என்பதே பொருளாகும் 'வித்தியா குரு' அல்லது 'கல்வி ஆசிரியன்' நூல்கள் வாயிலாக அறியாமையைப் போக்கி, அறிவைத் தருகின்றான். 'கிரியா குரு' அல்லது 'வேள்வி ஆசிரியன்' பல கழுவாய்கள் (பிராயச் சித்தங் கள்) வாயிலாகப் பாவத்தைப் போக்கிப் புண்ணியத்தைப் பெறு விக்கின்றான். 'கழுவாய்' அல்லது 'பிராயச்சித்தம்' என்பவை தான்செய்த குற்றத்திற்குத் தானே ஓரளவு விதித்துக்கொள் ளும் தண்டனைதான். 'ஞான குரு அல்லது 'அருளாசிரியன்' அத்துவ சுத்தி அல்லது கலா சோதனையால் சஞ்சித கன்மத்தைப் போக்கித் தத்துவ ஞானத்தைத் தருகின்றான். ஆகவே எவ் வகையிலும் குற்றம் நீங்குவது குருவால் அன்றி இல்லை. குரு இல்லாமல் ஞானம் கிடைக்கமாட்டாது என்பதை,

"ஞானம் இவன் ஒழிய நண்ணரியிடும், நற்கல்அனல்
பானு ஒழியப் படின்"

என விளக்குகின்றது திருவருட்பயன். சூரியன் 'இல்லாமலே சூரியகாந்தக் கல்லில் நெருப்பு உண்டாகுமானால், ஞான குரு இல்லாமலேயும் ஞானம் கிடைக்கும்' என்பதுதான் இக்குறளின் பொருள். இரண்டும் முடியாத செயலே என்பதைத்தான் இக் குறள் விளக்குகின்றது. தொட்டுக் காட்டாத வித்தை, சுட்டுப் போட்டாலும் வாராது'' என்ற நம் நாட்டுப் பழமொழியும் இதனையே வலியுறுத்துகின்றது. உயிர்கள் உணர்த்த உணரும் இயல்புடையன என்பதையும், அதனால். அவைகட்குக் குருவருள்

இன்றியமையாதது என்பதையும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பின்வரும் இருவெண்பாக்களால் விளக்கியருள்கின்றார்.

ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவம் சித்தியெல்லாம் பெற்றும் — குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னம்மாந் தினம்.

உணர்த்தில் உணர்வேன்; உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன் — உணர்த்தியென்னுட்
பூண்டமல மாயைகன்மம் போக்கிச்சிவானந்தத்
தாண்டருள்வை சொக்கநாதா.

இனி,

"ஆகமங்கள் எங்கே அறுசமயந் தான்எங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே — பாகத்து
அருள்வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு"

"சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தில் வாய்க்கும்நலம் வந்துறுமோ — ஆர்த்தகடல்
தண்ணீர் அருந்தினர்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு"

என்னும் திருக்களிற்றுப்படி வெண்பாக்களும், 'கல்வியால் மட்டும் உண்மை ஞானத்தைப் பெற்றுவிட முடியாது' என்றே அறிவிக்கின்றன. ஆகவே யாவர் ஒருவர்க்கும் குருவருளாலேயே அஞ்ஞான இருள் நீங்கி, மெய்ஞ்ஞான ஒளி பிரகாசிப்பதாகும்.

சற்குரு :

"சாத்திரத்தை ஓதினர்க்கு" என்ற திருக்களிற்றுப்படி வெண்பாவில் குருவை "சற்குரு" என்று விளங்கக்கூறியிருத்தல் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. 'சற்குரு' என்பதைத் தமிழில் 'நல்லாசிரியன்' என்பர். சற்குருவை அடைந்து குரு பத்தியில் மிகுந்து அவரை வழிபட்டு அவரது அருளால் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து ஞானம் இனிது விளங்கப் பின் நிட்டை கூடி அனுபவம் முதிரப் பெற்றவரே பிறருக்கு உண்மை ஞானத்தைத் தரவல்ல சற்குருவாவார். எனவே, இதுதொன்று தொட்டு இடையறாது வரும் உபதேச பரம்பரையில் இயல்வதேயாகும். அவ்வாறின்றி நூற்கல்வி, நூல் ஆராய்ச்சி முதலியவைகளால் சிலவற்றை உணர்ந்து, அங்ஙனம் உணர்ந்த அளவிலே குருமார்களாய்ப் பிறருக்கு உபதேசிக்கத் தொடங்குபவர்கள் சற்குருமார்களாகார். இதனை ஸ்ரீ குருஞானசம்பந்தர் தமது சிவபோக சாரத்தில்,

" தன்னை அறியார், தலைவன் றனை அறியார்,
முன்னை வினையின் முடிவறியார் — பின்னைக்
குருக்கள் என்று பேரிட்டுக் கொள்ளுவர்கள் ஐயோ
தெருக்கள் தனிலே சிலர் "

என்று அருளிச்செய்தார். தருமையாதீனத் தம்பிரான்களில் ஒருவராகிய படிக்காசு தம்பிரானும் தமது தண்டலையார் சதகத்தில்,

" அருள்மிகுத்த ஆகமநூல் படித்தறியார்
கேள்வியையும் அறியார்; முன்னே
இருவினையின் பயன் அறியார்; குருக்கள்என்றே
உபதேசம் எவர்க்கும் செய்வார்;
வரம்மிகுத்த தண்டலைநீ ணெறியாரே
அவர்கிரியா மார்க்கம் எல்லாம்
குருடனுக்குக் குருடன்கோல் கொடுத்துவழி
காட்டிவரும் கொள்கை தானே "

என்று பாடினர்.

குரு சற்குருவாதல்போலச் சீடனும் (மாணாக்கனும்) சற்சீடனாக (நன்மாணாக்கனாக) இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் உபதேசம் பயன்படும். இது எதுபோல்வது எனின், வித்து நல்லதாயிருப்பினும், நிலமும் நல்லதாயிருந்தால்தான் நல்ல பயன் உண்டாதல் போல்வதாம். குருவின் உபதேசம் வித்து. சீடன் அறிவு நிலம். இம்முறை கல்விக்கே கூறப்படுகின்றது. அஃதாவது நல்லாசிரியர்பால் நன்மாணாக்கன் சென்று அவரை வழிபட, அவர் அவனுக்குக் கற்பித்தவழியே கல்வி செம்மையுடையதாகும். அவ்வாறின்றி ஆசிரியரல்லாதார்பால் கற்றலும், மாணாக்கர் அல்லாதாருக்குக் கற்பித்தலும் கூடா என்று சொல்லப்படுகின்றது என்றால், ஞானத்திற்கு இம்முறை இன்றியமையாதது என்பதைச் சொல்லவேண்டுவதில்லை. ஆகவே, திருமூலர்,

" குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்;
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்,
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறே "

என்று அருளிச்செய்தபடி அசற்குரு அசற்சீடர்களது செயல் ஞானச் செய்தியாகாது, பரிதாபத்திற்குரியதாம்.

**சற்சந்தானம் :**

குரு பரம்பரை உலகில் நன்முறையில் விளங்கத் திருவுளங் கொண்ட இறைவன் தானே முதற் குருவாய்த் திருக்கயிலாயத்

தில் கல்லால் நிழலில் தென்முகக் கடவுளாய் இருந்து நந்தி பெருமான் முதலியவர்கட்கு உண்மை ஞானத்தை உபதேசிக்க, அவர்கள் வழியாகத் தோன்றிய சற்சந்தானங்களே சைவ ஆதீனங்கள். அவைகளில் நந்திதேவர்பால் உபதேசம் பெற்ற சனற்குமார முனிவர் வழியில் வந்த மெய்கண்ட சந்தானத்தில் கமலை ஞானப்பிரகாச தேசிகர்பால் ஞானோபதேசம் பெற்றுத் தம் ஆசாரியரும் வியக்கும் வண்ணம் அருளனுபவம் பெற்று விளங்கிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம் ஆசாரியரது அருளாணையின் வண்ணம் திருவாரூரினின்றும் போந்து நிறுவிய ஞானபீடமே தருமையாதீனம். அவ் ஆதிபரமாசாரியரது அருள்நோக்கினால் இவ்வாதீன பரம்பரை இன்றுகாறும் உண்மை ஞானத்தை உலகிற்கு அளித்துவருகின்றது.

## குருபூஜை விழா :

தருமையில் 'மேலைக் கோயில்' என வழங்கும் ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயிலில் ஆதிபரமாசாரியர் சிவசமாதியில் இருந்து இவ்வாதீனத்தை இன்றும் கடைக்கணித்து வருவது உண்மை அனுபவம். பின்னர் வந்த ஸ்ரீ ஆனந்தபரவச தேசிகர் முதலாக 25 ஆவது குருமகாசந்நிதானம் வரையில் உள்ள மகாசந்நிதானங்களின் குருமூர்த்த ஆலயங்களுள் பெரும்பாலன தருமையிலும், சில பிற தலங்களிலும் குருவருள் நிலையங்களாக விளங்கி அருள்புரிந்து வருகின்றன. ஆதிபரமாசாரியரது குருபூஜை விழா ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் பத்து நாட்கள் பெருவிழாவாக வைகாசிமீ முதல் தேதி முதலாகத் தொடங்கி நடைபெற இருக்கின்றது. அவ்வமையம் சமய வகுப்புக்கள், சொற்பொழிவுகள் முதலியன நிகழ 26ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளம் பாலித்துள்ளார்கள்.

இவ்விழா நிகழ்ச்சிகள் பலவற்றிலும் ஈடுபாட்டுடன் கலந்து இன்புறுதல் சற்குருவின் அருள்பெற்றுத் திருவருள் நலனை அடைதற்கு வழியாகும் என்பதை நினைவூட்டுகிறோம்.

ஆதீனத்தில் ஆண்டுதோறும் பல திருவிழாக்கள் நிகழினும் அவையெல்லாவற்றிற்கும் மேலான தலைமணியான இவ் விழா அனைத்து விழாக்கட்கும் ஓர் அணிகலனாய்த் திகழ்ந்து அருள் வழங்கும் விழாவாகும். ஆகவே, இவ் அணிவிழா நிகழ்ச்சிகளைக் கண்டு கேட்டுக் களித்துக் குருவருளும், திருவருளும் பெற்று உய்தல் சைவ மெய்யன்பர் பலர்க்கும் தலையாய கடனாகும்.

சிவதருமோத்தரக் கட்டுரை எண் 13.

# புண்ணிய - பாவங்கள்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்

திரு. ச. தண்டபாணி தேசிகர்

முற்கூறிய வைகுண்ட புவனத்திற்கு மேலே சிவபுரம். சிவனே பரம்பொருள்; அவரே பூசிக்கத்தக்கவர். தியானிக்கத்தக்கவர்; அவரையன்றிப் பிறரை யான் எண்ணேன்; போற்றேன் என்ற உறுதியுடன், வேறொரு உலகியற்பயனையும் விரும்பாமல் பூசித்தவர்கள் சிவலோகத்தைப்பெறுவர். அவர்கள் அவ்வுலகத்தில் எய்தும் பயனுக்கு வேறு எவ்வின்பமும் ஒவ்வாது. அவர்கள் கருதினால் எல்லாவின்பமும் எளிதில் எய்தும். ஆனால், அமுதம் உண்பார் புளிக்காடியை விரும்பாததுபோலச் சிவ தலத்துச் சிவானுபவம் மேவப்பெற்றோர் வேறொன்றையுங் கருதார். கருதக்கூடிய அளவு அவர்களுடைய கருவி கரணங்கள் காரியப்படா. 'பரமே பார்த்திருப்பார், பத பதார்த்தங்கள் பாரார்.

## வசித்தவர் வாழ்வும் - பூசித்தவர்பேறும்:

கோடிசூரியர்கள் ஒருங்கெழுந்து ஒளி செய்வதுபோல அங்குப் பல விமானங்களும், மண்டபங்களும் அழகு செய்யும். விரும்பிய போகங்கள் அனைத்தையும் எளிதில் அளிக்கும்; ஆதலால் சிவபுரத்தின் பெருமையை அளவிட்டுச் சொல்ல யாராலும் இயலாது. அங்கே வாழுகின்ற, இயங்குவ நிற்பவான உயிர்கள் அனைத்துமே அங்கேவாழக்கொடுத்துவைத்த புண்ணியத்தால் இறந்தபின் சிவபதம் அடையுமாயின் அங்கிருந்து அன்புடன் குறைவற அருச்சித்துப் பூசித்தபேர்கள் சிவபதம் அடைவர் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

பரம்பொருள் சிவனே என்றும், அவனே ஆக்கி அளித்து அழித்து அருளுகின்றான் என்பதைச் சிறிதும் தெளியாத பாமரரும், இவற்றையுள்ளவாறுணர்ந்து வழிபடுகின்ற ஞானிகள் வழிபடுவதைக்கண்டு வழிபடுவராயின், நட்சத்திர மண்டலத்தில் விளங்குகின்ற நட்சத்திரங்களைப்போல எண்ணற்ற எல்லையற்ற விமானங்களின் நடுவே நாயகமாக விளக்கும் விமானத்தில் இன்பமாக வாழ்வர்.

**சிவதன்மங்களைச் சிரத்தையோடு செய்தோர் எய்தும்பயன் :**

சிவதன்மங்களைச் சிந்தை விருப்புடன் செய்தபேர்கள் சீருள்ள வைகுண்ட முதலான பதங்களை எய்தி இன்புற்று, அப்புண்ணியப் பயன் உண்டு கழிந்தபின் மீளவும் பூமியிற் பிறந்து, சிவத்தியானத்துடன் தவமும்செய்து சிவயோகத்தைப் பெறுவர்.

இங்ஙனம் கூறிய சிவயோகத்திற்கு மேலும் கந்தபுவனம், சக்திபுவனம், மகாசிவபுவனம் என மூன்று உலகங்கள் உள. அவற்றுள் கந்தபுவனத்தில், ஆறுமுகங்களையும் பன்னிருகைகளையும், வேலையும் உடைய முருகப்பெருமானை உருகிப்போற்றினோர் வாழ்வார்கள்.

இந்தக் கந்தபுவனத்திற்கு மேலுள்ளது சக்திபுவனம், உமாமகேஸ்வரியையே பேரொளிப்பிழம்பாக வழிபடுவோர் இப்புவனத்தை யெய்தியின்புறுவர்.

இதற்கு மேலுள்ளது மகாசிவபுவனம். இங்குப் படிகம் போன்ற திருமேனியையும் மூன்று கண்களையும், சூலம், உருத்திராக்கமாலை, அபயம், வரதம் ஏந்திய நான்கு திருக்கரங்களையும், அடர்ந்த சடாமகுடத்தையும் உடைய பரமசிவனைத் தியானிப்பவர்கள், சாரூப முத்திபெற்று வாழ்வார்கள்.

இவ்வுலகத்தைப் பெற்றோர்கள் மீளவும் பூமியிற் பிறவார்கள். அங்கேயே ஞானயோகத்தில் நிலைத்துநின்று மண்ணுதி-மகேசதத்துவம்வரை அனைத்தும் அழியும் சர்வசங்கார காலம்வரை வாழ்ந்து, சங்காரகாலத்து மலம் நீங்கப்பெற்று ஞானனந்த அனுபவம் பெற்றுச் சிறந்த முத்தான்மாக்கள் ஆவர்.

இவையன்றிப் பைசாசம், இராக்கதம், இயக்கம், கந்தருவம், இந்திரம், சௌமியம், பிராஜேசம், பிராமியம், முதலான புவனங்களும் கீழ்க்கீழாக உள்ளன. அவைகளில் வாழ்கின்ற உயிர்களும் உள. அவற்றிற்குக் குணங்கள் பரிபாகத்திற்கு ஏற்பக் கூடிக்கூடிவரும்.

பிருதுவி முதலான ஐம்பூதங்களும், மனம் அகங்காரம் புத்தி, பிரகிருதியும் ஆகிய ஒன்பது தத்துவங்களும் நாராயணன் இதயத்துச் செறிந்துநின்று அவனறிவை விளக்கும், பிருகிருதி நீங்கிய எட்டுத் தத்துவங்களும் நான்முகனுக்கு அறிவு விளக்கந்தருவன. புத்திதத்துவம் நீங்கிய ஏழு தத்து

வங்களும் பிராஜேசபுவனவாசிகளின் அறிவைப் பரிபாகப் படுத்துவன. இங்ஙனமே கீழ்க்கீழ்ப் புவனவாசிகட்கும், அவற்றின் தலைவிகளுக்கும் அறிவுவிளக்கந் தருவன குறைந்து குறைந்து வருகின்ற தத்துவங்களாம்.

முடிவாக மொழிகின்றேன். முனிவனே கேட்பாயாக; எப்போது விண்ணில் எறிந்தகல் மண்ணையடைவது தப்பாதோ அதுபோலச் சிவனைநோக்கிச் செய்யும் சிவதன்மங்கள் ஒருபோதும் பயனையளிக்காமல் இரா. நாம் செய்யும் மெல்வினை வல்வினைகட்கு ஏற்பப் பயனைச் சிவன் அளித்தே தீருவன் எனச் சிவகுமாரராகிய முருகப்பெருமான் அகஸ்தியருக்குச் சிவதன்மம் இவை என்பதையும், அவற்றின் இயல்புகளையும், இயற்றினோர் எய்தும் பயனையும் உபதேசித்தார்.

இனிப் பாவவகைகளைக் கூறுகின்றார். உயிர்கள் உணர்ந்து அவற்றினின்று நீங்கித் தப்பிப் பிழைக்கட்டும் என்ற திருவருட் பெருக்கினலே' என்று பாவஇயல் தொடங்குகிறது.

## பாவங்கள் :

பாவம் என்பது முன் முன் பிறவிகளில் உயிர்கள் அறியாமையால் இயற்றிய தீவினைகளின் பயனாய், அந்தந்தப் பிறவிகளில் அனுபவித்துக் கழித்தனபோக எஞ்சியுள்ள கர்மங்கள் எடுத்த பிறவியிலும் வாசனையாய் வந்து தாக்கப் பூமியிற் பிறந்து, பின்னும் தன்னையே செய்து உயிர்கள் கெட உணர்வை மயக்கி நிற்பது.

இது தூலம், சூக்குமம், சூக்குமதரம் என மூவகைப்படும். அவற்றுள் தூலபாவங்களே இப்போது தொகுத்துரைக்கப் பெறுகின்றன. தூல கன்மங்கள் மனம் வாக்கு காயம் மூன்றிலும் விளைவதால் முத்திறப்படும்.

அம்மூன்றுள் மனத்தால் விளையும் பாவங்கள், பிறன் தாரத்தைக் கூட நினைத்து உடைமைகளைக் கவர நினைத்தலும், உடைமைகளை யாருக்கும் பயன்படாதபடி அழிய நினைத்தலும், பிறவுயிர்களைக் கொல்ல நினைத்தலும் என நான்கு வகைப்படும்.

காரணமின்றி யழுதல், கோட்சொல்லுதல், பொய்யுரைத்தல், பிறன்பழி கூறுதல் ஆகிய நான்கும் வாக்கால் வரும் பாவங்கள்.

பிறன்மனை புணர்தல், உயிர்களைக்கொல்லுதல், தகாத உணவுகளையுண்டல், பிறன் பொருளைக் கவர்தல் ஆகிய நான்கும் உடலால் வரும் பாவவகைகளாம்.

இவையன்றி மனம் முதலான மூன்று கரணங்களாலும் விளைகின்ற அதிபாவங்களும் உள. அவையாவன; சங்கார காரணனாகவும், மால் பிரமன் முதலோரையும் படைப்பவனாகவும் உள்ள சிவபரம்பொருளை நிந்தித்தல் அதிபாதகத்தில் தலைசிறந்தது. சிவதூஷணம் செய்வோர் நரகத்தில் பன்னூறுண்டு - ஏன் பல்லூழிக்காலம் கிடந்து வருந்துவர்.

அங்ஙனமே, சிவனருளிய வேதசிவாகமங்களுக்கு ஒப்பாகப் பசுபாச நூல்களைச் சொல்வோரும், பிறர்கூறிய நிந்தையைக் கேட்டுச் சிந்திப்போரும், அதிபாதகர்கள் ஆவர். அவர்கள் எரிவாய் நிரயத்து வருந்துவர்.

உபதேசிக்கும் ஆசாரியனை நிந்திப்போரும் அதிபாதகர். அவர்கட்கு அதே கதிதான். சிவன் பொருளைக் கவருவோர்; குருதிரவியத்தைக் கவருவோர், சிவாலயம் மடாலயங்களுக்குச் சொந்தமான பொருள்களைத் தம்போகத்திற்காகச் சேர்ப்போர், திருடுவோர், குருநிந்தை, சிவநிந்தை, வேதநிந்தை செய்வோருக்குத் துணை நிற்போர், அவர்கள் அங்ஙனம் செய்யாதவாறு தடுக்காமல் அவர்களை மறைத்துக்காப்போர் அனைவரும் அதிபாதகர்களே. அவர்களுக்கு என்றுமே வீடில்லை. மனைவியும் மக்களும் தீராநோயால் வருந்தச் செல்வம் தொலைந்து தெருவில் இரந்துண்டு ஏங்குவர்.

## அறியாதவர்கட்குக் கொடுக்குந் தண்டனைகள் :

சிவசொத்துக்களையும் – மடம், நந்தவனம் முதலியவற்றின் பொருள்களையும் திருடுபவர்களுக்குத் தலையைத் துண்டித்தலாகிய தண்டனை கொடுக்கத்தக்கது. அவர்களை அப்படித் தண்டிக்கும் ஆற்றல் தனக்கு இல்லையாயின் பலவான் ஒருவனுக்குப் பணம் கொடுத்தாவது கொல்லச்செய்யலாம். அதற்குக் கையாலாகாதாயின் நாடு கடத்தலாம். அதுவும் செய்யாமல் இருக்கும் தருமகர்த்தாக்கள் அவனுக்குடந்தையாயிருக்கு அதிபாதகர்களாக எண்ணப்படுவார்கள். அவர்கட்குரிய தண்டனைகள் இவர்களுக்கும் அளிக்கப்படலாம்.

சிவனையும், சிவபூசனையையும் கண்களிப்பக்கண்டு தொழாதோரும், சிவபூசை செய்பவனைச் சிவனெனவே சிந்தை செய்து

வழிபடாதோரும், வழிபடக் கூசுவோரும் ஆசாரம் சீலம் இன்றி ஆலயங்கட்குச் செல்வோரும், தனக்கு வறுமை வந்து, தான் மிக வருந்தினாலும், சிவசந்நிதி, சிவாக்கினியின் சந்நிதி, குரு சந்நிதி இங்கெல்லாம் போகும்போது சிறிதளவேனும் பொருள் கொடாதோரும், கைத்தொண்டு மெய்த்தொண்டு செய்யா தோரும் அதிபாதகர் ஆவர்.

## இங்ஙனமே அதிபாதகமாக எண்ணப்படும் பெரும் பாவங்கள் :

சிவஞானிகள் அல்லாதாரும், நிறைமதி நாளும் அமாவாசையும் முதலான சிறந்த நாட்களில் சிவாகமங்கள் சிவாக்கினி சைவாசாரியன் முதலான எழுந்தருளியிருக்கும் மடங்கள் யாக சாலைகள், வீடுகள் முதலியவற்றை அலகிட்டுமெழுகி, சந்தன முதலான மணப்பொருள்களால் அணிசெய்தாரும், குருமார் ஆணைவழங்கப்பட்டுத் தாம் மேற்கொண்ட இரதங்களை நடுவில் விட்டோரும், மடாதிபதிகளாக விளங்குகிற சிவஞானச் செல்வர் களை நிந்தை செய்வோரும், அறநூல் கல்லாத பொல்லாத அற்பரும் சிவாகம நூல்களையும், சிவபுராணம், திருமுறைகள் முதலியவற்றையும் அறுகாற்பீடத்து வைத்து அர்ச்சித்து தூப தீபங் கொடுத்து வழிபட்டுப் படியாதோரும், பிறருக்குப் பாடம் சொல்வோரும், ஆகிய இவர்கள் சிவநிந்தகரும் சிவஞானி நிந்தகருமாவர்.

அங்ஙனமே சிவநூல்களை நீராடல் முதலிய நித்திய கன்மஞ் செய்யாது தீண்டுவோரும், படிப்போரும், மெழுகாத இடத்தில் வைத்துப் படிப்போரும் சிவநிந்தகர் ஆவர்.

திவ்யாகமங்களையும், திருமுறைகளையும் விலைக்கு விற்போரும் ஊதியமாகப் பணம்பெற்றுப் படிப்போரும் பாடஞ்சொல் வோரும், ஞானசாரியனை வழிபடாமல் சிவ நூல்களைப் படிப் போரும் – படிக்கக்கேட்போரும், ஆசாரியனுக்குரிய பணிவிடை களைச் செய்ய மனங் கூசுவோரும், பணிவிடை செய்வோரைக் கலைத்துவிடுவோரும், குருநிந்தகராவார்கள்.

ஆசாரியன் வறுமையுற்ற காலத்துப் பாதுகாவாதாரும், எதிர்த்துக் குறைகூறியிகழ்வோரும், ஆசாரியனும் வித்யா குருவும் கடன், பங்காளிகள், பகைவர் இவர்களால் துன்புறுங் காலத்து அவர்களைச் செயித்துக்காவாமல் காட்டிக்கொடுத்துப் பராமுகம் செய்வோரும், குருபத்தினி, புத்திரர்கள் சுற்றத்தார் கள் இவர்களை, இகழ்வாரும், குருநிந்தகராவர். சிவநிந்தகரும்-குருநிந்தகருமாகிய இவர்கள் அனைவரும் அதிபாதகர்கள் ஆவார்கள்.

**மகாபாதகர்கள் :**

அகத்தியனே! மகாபாதகர்கள் யார்யார் என்பதைத் தெரிவிப்போம் கேட்பாயாக என்று குமரக்கடவுள் கூறத்தொடங்குகிறார்.

அந்தணனைக் கொன்றவன், கள்குடித்த பிராமணன், திருடன், குருபத்தினியைப்புணர்ந்த கொடியோன், இவர்களோடு நட்பாகப் பழகுபவன் ஆகிய இவர்கள் ஐவரும் மகாபாதகர்கள் ஆவார்கள்.

விரோதத்தாலோ - கோபத்தாலோ பொருளாசையாலோ - அச்சத்தாலோ அந்தணரை வைதவனும், பேரறிஞன் என்று தன்னைத்தானே தருக்கித்திரிவோனும், ஆசிரியரோடு பகை பாராட்டுவானும், அற்பனும் பிரமகத்தி செய்தவனும், தண்ணீர் குடிக்கவும், புல்மேயவும் போகும் பசுக்களை மறித்து விரட்டுவோனும், இல்லையென்று வந்திரப்போர்க்கு இல்லையென்போனும் அறிஞனை அவை நடுவே பழித்துரைப்போனும், அரசற்குக் கோள்சொல்லி மக்களுக்குத் தீமை செய்விப்போனும், ஆலயம் - மடம் - அக்கிரகாரம் - பசுமேயும் மேய்ச்சல் நிலம் - ஆற்றங்கரை முதலிய இடங்களைக் கவர்ந்து தமதாக்கிக்கொள்வோனும், பிறர் கவரும் வண்ணம் சூழ்ச்சி சொல்லிக் கொடுப்போனும், அந்நிலங்களின் விளைவை எடுத்துண்போனும், மகாபாதகர் ஆவார்கள்.

பிறருடைய பசு, முதலிய உயிர்களைக் கவர்வோரும், பறவைகளைக் கொள்வோனும். காடு, வழி, மரம், நிழல் மரம், புல் வைக்கோற்போர் இவைகளுக்குத் தீமூட்டுவோனும் மகாபாதகனாவான்.

பலருக்கு உணவாகும் வாழைக்கொல்லை, பழத்தோட்டம், கருப்பங்கொல்லை, வயல் முதலியவற்றை அழித்தவனும் மகா பாதகன் ஆவன்.

கன்னி, மருகி, தமையன் மனைவி, தம்பி மனைவி, புதல்வி, தாய், தோழன் மனைவி இவர்களைப் புணர்ந்தவனும் குரு பத்தினியைக் கூடியவன்போல மாபாதகனாவான்.

அயலானை மருவும் தன்மனைவியைத்தள்ளி வையாதவனும் மாபாதகனே.

இவ்வாறான பாதகம் - அதிபாதகம் - மகாபாதகம் செய்தோர்கள் அளவில் காலம் நரகத்திற் கிடந்து வருந்துவர். முனிவனே இனி - உபபாதக வகைகளைக் கூறுவோம் கேள் என்று கூறத்தொடங்கினார் கந்தப்பெருமான்.

# திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.**

(மலர் 32. இதழ் 5. பக்கம் 229 - இன் தொடர்ச்சி)

பத்தாவது குறள்,

"இன்பி லினிதென்ற லின்றுண்டே லின்றுண்டாம்;
அன்பு நிலையே அது"

எனவரும்.

இதன் பொருள் :- அது அன்பு நிலையே - மேற்கூறிய மூன்றாய தன்மை தோன்றாத அப்பேரின்பந்தான், அதனை விரும்புகின்ற விருப்ப நிலையில் உண்டாவதே யாதலின்; இன்பில் இனிது என்றல் இன்று உண்டேல் இன்று உண்டாம் — 'இவ்வின்பம் இதுகாறும் நாம் நுகர்ந்து வந்த இன்பங்கள் எல்லாவற்றினும் மேலாய் இணையற்ற இன்பமாய் உள்ளது' என உணரும்தன்மை ஆன்மாவிற்கு இப்பிறப்பிலே உண்டாகுமாயின், முன்னர்த் தோற்றமாத்திரையான் வெளிப்பட்ட அவ்வின்பம், பின் முறுகி எழுந்து, மேற்கூறியவாறு மூன்றாய தன்மை தோன்றாத பேரின்பமாய் விளைகின்ற நிலையும் இப்பிறப்பிலே அதற்கு உண்டாவதாம்.

விளக்க உரை :— ஆகவே, 'அவ்வுணர்வு இப்பிறப்பில் தோன்றாதாயின், இப்பிறப்பு நீங்கிய பின்னர்ச் சுத்த தத்துவ புவனத்தை அடைந்து வாழும் நிலையில் அவ்வுணர்வுதோன்ற, அவ்வின்ப நிலையும் தோன்றும்' என்றவாறு. 'சிறுபான்மை மீள நிலத்திற் பிறந்து அந்நிலையை எய்துதலும் உண்டு' என்பது, மேல், "உற்றாரும் பெற்றாரும்" என்னும் குறள் உரையில் (76) காட்டினாம்.

"இன்பில் என்றதில் இல், உறழ் பொருவின்கண் வந்த ஐந்த னுருபு. என்றல் - என்று உணர்தல். "இன்று உண்டேல்" என்றது, 'அவ்வுணர்வு தோன்றுதற்குத் தடையாயுள்ள மலத்தின் வலிமை பெரிதாகலின், சகலராயுள்ளார்க்கு அவ்வாறாதல் அருமை' என்பது தோற்றி நின்றது. இன்பில் இனிது என்னும் உணர்வே அன்பாதல் வெளிப்படை. "இன்று" என மறித்துங் கூறினர், வலியுறுத்தற் பொருட்டு. பின்னதில், 'இன்றே'

என்னும் தேற்றேகாரம் தொகுத்தலாயிற்று. 'அன்பு நிலையே' என்னும் ஏகாரமும் தேற்றமே, 'பிறிதொன்றன்று' என வலியுறுத்தலின். அன்பு நிலையில் விளைவதனை "அன்பு நிலையே" என இவ்வாறு வலியுறுத்து ஓதினர், அஃது அதனை இடையீடின்றி உடன் பயக்கும் ஒற்றுமைபற்றி.

" ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே " * (1)

" அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே "*(2)

என்பனவும் இக்கருத்தே பற்றிவந்தன.

" எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉ மேவற் றாகும் " * (3)

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும்.

இதனால், உயிர் இன்புறு நிலையைப் பெறுமாறு கூறப்பட்டது.

## 9-ம் அதி : ஐந்தெழுத் தருள்நிலை

அஃதாவது, சிவ முதனிலை மறை (சிவ மூல மந்திரம்) ஆகிய ஐந்தெழுத்து மந்திரத்தின் திருவருள் முறைமை கூறுதல். அருள் நிலையாகிய உயிர் விளக்கத்தைப் பெற்றோர் பின் ஆனந்த விளக்கமாகிய இன்புறு நிலையை எய்தமாட்டாதவழி அதனை எய்துதற்குத் துணையாய் நிற்பது ஐந்தெழுத்து மந்திரமாகலின் அதனை இன்புறு நிலையை அடுக்க வைத்துக் கூறுகின்றார்.

முதற் குறள் :

" அருணூலு மாகமு மல்லாது மைந்தின்
பொருணூல் தெரியப் புகின் "

எனவரும்.

---

* (1) திருவாசகம்-கோயில் திருப்பதிகம் 1. * (2) திருமந்திரம்.
* (3) பொருள் - 220.

இதன் பொருள் :- அருள் நூலும் - அருள் நூலாகிய ஆகமங்களும்; ஆரணமும் - அறநூலாகிய வேதமும் (என்னும் இரு முதல் நூல்களும்,) அல்லாதும் - இம் முதல்நூ லல்லாத மிருதி, புராணம், இதிகாசம் ஆகிய வழி நூல் சார்பு நூல்களும்; தெரியப் புகின் - நுணுகி ஆராயப் புகுந்தால்; ஐந்தின் பொருள் நூல் - ஐந்தெழுத்து மந்திரத்தின் பொருளை ஏற்ற பெற்றியால் விளக்குவனவேயாம்.

விளக்கம் :- சிறப்பு நூலாதல் பற்றி ஆகமத்தை முன்னர்க் கூறினர். "அருள்நூல் ஆரணம்" என்றவற்றில் முறையே 'ஆகமம், அறநூல்' என்பவற்றை ஒன்றன்குறிப்பால் மற்றொன்றில் பெற வைத்தார். "அல்லாது" என்ற ஒருமை தொகுத்துச் சுட்டியது. 'ஐந்தெழுத்தின் பொருள் இவை' என்பது வருகின்ற குறளில் கூறப்படும்.

இதனால், 'ஐந்தெழுத்து மந்திரம், அனைத்து நூல்களின் முடிவாயுள்ள ஒரு பெருந்தொடர்' என அதன் சிறப்புக் கூறப் பட்டது.

"அஞ்செழுத்தே ஆகமமும், அண்ணல் அருமறையும்,
அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்அனைத்தும் — அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும், ஆறுறுக் கப்பாலாம்
மோனந்த மாம்முத்தி யும்"

என்ற உண்மை விளக்கச் செய்யுள் இங்கு அறியத்தக்கது.

இரண்டாவது குறள்,

"இறைசத்தி பாச மெழில்மாயை ஆவி
உறநிற்கும்; ஓங்காரத் துள்"

எனவரும்.

இதன் பொருள் :- ('சி, வா, ய, ந, ம' என்னும் ஐந்தெழுத்தில்) இறை - கடவுள்; சத்தி - கடவுளது ஆற்றல்; பாசம் - தளை; எழில் மாயை - எழுச்சியையுடைய மாயை; ஆவி - உயிர் என்பவை; உற நிற்கும் - பொருளாகக் கொள்ள நிற்கும். ஓங்காரத்துள்ளும் ; 'ஓம்' என்னும் ஊமை மறையிலும் அன்னதாம்.

விளக்கம் :- 'ஐந்தில்' என்பது முன்னைக் குறளினின்றும் வந்து இயைந்தது, 'ஐந்தெழுத்தாவன இவை' என எடுத்தோதாது, குருமுகமாகக் கேட்டுணர வைத்தார், 'அது மரபு'

என்றற்கு, 'ஓங்காரத்துள்ளும்' என்னும் இறந்தது தழுவிய எச்ச உம்மை தொகுத்தலாயிற்று. 'அன்னதாம்' என்பது சொல்லெச்சம். ஓங்காரத்தைச் சிகாரம் முதலியவற்றிற்கு ஏற்ப 'நாதம், விந்து, அகாரம், உகாரம், மகாரம்' என ஐந்தாகப் பகுத்து இறை முதலிய பொருள்களைக் கொள்க. ஓங்காரமும், திருவைந்தெழுத்தும் பொதுவும், சிறப்புமாகின்ற அவ்வளவேயன்றிப் பிறிது வேறுபாடுடையன அல்ல என்பது உணர்த்துதற்கு ஓங்காரத்துள் அவ்வாருதலையும் உடன் கூறினர். இவ்வாறு உம்மை விரித்தலும், சொல்லெச்சம் வருவித்தலும் இன்றிக் கிடந்த அளவே கொண்டு உரைப்பனவெல்லாம் இயைபில்லனவும், மிகைபடக் கூறுவனவுமாதல் அறிக. 'பாசம்' என்பது தலைமை பற்றி முதல் தடையாகிய ஆணவமலத்தையேகுறிக்கும். "மாயை" எனவே அதனைப்பற்றி நிற்கும் கன்மமும், அவற்றைத் தொழிற்படுத்தும் திரோதாயியும் தாமே கொள்ள நிற்கும்.

இதனல், 'ஐந்தெழுத்தின் பொருளாவன இவை' என்பது கூறப்பட்டது.

மூன்ருவது குறள் :

"ஊன நடனம் ஒருபால் ஒருபாலா
ஞான நடம், தான்நடுவே நாடு"

எனவரும்.

இதன் பொருள் :- ஊன நடனம் ஒருபால் (ஆ) - மேற்கூறிய பொருள்களுள் அறியாமையுட் படுத்தும் பொருள் ஒருபக்கம் சேர்ந்திருப்பனவாகவும்; ஞான நடம் ஒருபால் ஆ- அறிவைத் தரும் பொருள்கள் மற்றெரு பக்கம் சேர்ந்திருப்பனவாகவும்; தான் நடுவே (ஆ) - அந்நடனங்களால் பயன் அடைகின்ற உயிர் அவ் இருதிறத்திற்கும் நடுவே இருப்பதாகவும்; நாடு - (மாணவகனே) ஆராய்ந்துணர்வாயாக

விளக்கம் :- பின்னர் "ஞானம்" என வருதலால், முன்னர், "ஊனம்" என்றது அஃது இல்லாமையைக் குறித்தது. நடனம் புரிவனவற்றை 'நடனம்' என்றே ஒற்றுமைப்படுத்துக் கூறினர். "நடனம்" என்றது 'விளையாட்டு' என்றவாறு. இறைவனது செயல்களை அவனது விளையாட்டாகக்கூறுதல் மரபாதல் வெளிப்படை. ஈறு குறைந்து நின்ற 'ஆக' என்பதனை ஏனையிடங்களிலும் கூட்டுக. அறியாமையுட் படுத்துவன, பாசமும், மாயை

முதலியனவும் ஆதலும், அறிவைத் தருவன இறையும், சத்தியும் ஆதலும் இனிது விளங்கிக் கிடந்தன.

இதனால், மேல், "இறை சத்தி பாசம் எழில்மாயை எனக் கூறப்பட்டவை அவ்வாறு சேர்ந்து ஐந்தெழுத்தின்பொருளாய் ஒருங்கே நில்லாது. இரண் டிரண்டு சேர்ந்து இருபாலும் பொருளாய் நிற்க, உயிர் இடையே பொருளாய்நிற்கும் என்பது கூறப்பட்டது.

(தொடரும்)

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### தருமையாதீனம்

### ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

நிகழும் பிரமாதீசஞு சித்திரைமீ 3உ (15—4—72) ஆதி வாரத்தன்று காலை 9-30 மணி அளவில் திருக்குடந்தை சிவனடியார் திருக்கூட்டத்தினர் தங்களது 26வது ஆண்டு 15ஆம் ஆதிவார வழிபாட்டினை தர்மசம்வர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ கம்பகரேசபெருமான் திருவருட்டுணைகொண்டும், தருமை ஆதீன குருவருட்டுணைகொண்டும் இனிதே நிகழ்த்தினர். அது போது ஆலய கண்காணிப்பாளர் அவர்களும் தங்கள் சிப்பந்திகளுடன் வழிபாட்டு காலத்தே உடனிருந்து வேண்டுவன செய்து கொடுத்தமை போற்றுதற்குரியதாகும். ஆலய முழுமையும் மிகவும் துப்புரவாக விளங்கியதும், திருவுருவங்கள் பலவும் அருள் பொலிவுடன் காட்சி கொடுத்தமையும் மிக மிக பாராட்டு தற்குரியதாகும், தருமையாதீனக் கோவில் எதுவுமே பொலிவுடன் விளங்கும் என்பதற்குஎடுத்துக்காட்டாகவே இவ்வாலயம் விளங்குகிறது. நாட்டில் நலம் சிறக்கவும் அடியார்களது நடுக்கம் தீர்க்கவும் அறநிலையங்கள் யாவுமே செவ்விதின் பணி புரியவும் அறக்கட்டளைகள் சிறந்து ஓங்கவும் அடியார்கள் இவ்வாண்டின் முதல்வார வழிபாட்டிலே இறைவனைப் போற்ற விண்ணப்பித்தனர்.

தருமை ஆதீனத் தலைவர் அவர்களது அருளாட்சி என்றும் நின்றும் நிலவி விளங்குமாறு இறையருள் துணைநிற்பதாக.

(Sd.) க, சுந்தரேசன்,

5-4-73 திருக்குடந்தை சிவனடியார் திருக்கூட்டச் செயலர்.

திருவாமூரில் ஸ்ரீ அப்பர் குருபூஜை விழா :






தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பிரசாதம் வழங்குதல்

## திருவாமூர் ஸ்ரீ அப்பர் குருபூஜை விழா:



தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில்
காளையார்கோயில். திருமுறைப் பண்ணிசைவாணர்,
திரு. மு. சொர்ணம் பிள்ளை அவர்கட்கு
"திருமுறைக் கலாநிதி" என்னும் பட்டம் வழங்கி
பொன்னாடை போர்த்தி ஆசியருளல்

தருமையாதீனத்தில்.



சென்னை, உயர்மன்ற நீதிபதி,
மாண்புமிகு. திரு. நடராஜன் அவர்களும்
கடலூர் மாவட்ட நீதிபதி.
திரு. T. N. சிங்காரவேலு அவர்களும் குடும்பத்துடன்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைத் தரிசித்தல்

# ஆடத் தெரியாத கடவுள்

நீதிபதி, கனம். S. மகராஜன் M. A., B. L.,

புண்பட்ட நெஞ்சுக்குச் சிரிப்பைப்போல இதமான மருந்து வேறு கிடையாது. உலகவாழ்க்கையிலிருக்கும் ஏற்றத்தாழ்வுகள், இன்பத்துன்பங்கள், பித்தலாட்டங்கள், இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு, சிரிக்கத்தெரியாமலும் நாம் இருந்தோமேயானல் என்ன ஆகும் நம்கதி? பைத்தியம் பிடித்துவிடும்; பைத்தியத்திலிருந்து தடுப்பதற்காகவே நமக்குச் சிரிப்பு என்ற தெய்விக சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது.

" நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள் "

என்று சொன்னர் குறளாசிரியர். சிரிக்கத் தெரியாதவனுக்குப் பட்டப்பகலும் அமாவாசை இருட்டாகத்தானிருக்கும் என்பது இந்தக் குறளின் பொருள். தெளிவில்லாத காரணத்தால் சிரிப்பற்று இருக்கிறேம். உள்ளத்தில் தெளிவு வந்துவிட்டாலோ, வாழ்க்கையே ஒரு சிரிப்பாணியாக இருக்கும். The world is a comedy to those who think and a tragedy to those who feel ' என்று ஒரு அறிஞர் சொன்னர்; அதாவது, சிந்தனைத் தெளிவுள்ளவனுக்கு இந்த உலகம் ஒரு ஹாஸ்ய நாடகமாகத் தோன்றுகிறது. உணர்ச்சி வசப்பட்டவனுக்கு இந்த உலகம் சோக நாடகமாகக்காட்சி கொடுக்கிறது என்று சொன்னர்.

மிருக வர்க்கங்களிலே சிரிக்கும் ஆற்றலைப் பெற்ற பிராணி, மனிதன் ஒருவன்தான். ஆனல், இந்த அரிய ஆற்றலை மனிதனுக்குப் பயன்படுத்தத் தெரியவில்லையே என்று ஆற்ருமைப் படுகிருர் வள்ளுவர்.

அணுகுண்டுக்கில்லாத சக்தி சிரிப்புக்குஇருக்கிறதுஎன்பதை ஒருபுராணக்கதை விளக்குகிறது. திரிபுரத்தில் அட்டகாசம் செய்துகொண்டிருந்த அரக்கர்களைச் சிவபெருமான் அழித்தார்.

எப்படி அழித்தார்? ஹைட்ரஜன் குண்டுபோட்டல்ல, ஒரு சிரிப்பு சிரித்தார்; அவ்வளவுதான், தீமையே வடிவாக வந்த அரக்கர்கள் தீய்ந்து ஒழிந்தார்கள்.

"சீராரூர் மேவும் சிவனே — சிரிப்பன்றோ
நேராரூர் அட்ட நிலை"

என்று பாடினர் கவினர்.

சிரிப்பு புறஇருளை மாத்திரமல்ல, அக இருளையும் அகற்றி, துன்பத்தைத் துடைத்து இன்பத்தை நல்குகிறது.

விவேகானந்தரிடத்திலே சிஷ்யையாக இருந்தார் நிவேதித்தா என்ற ஆங்கிலப் பெண்; நற்குணங்கள் நிறைந்த பெண் இருந்தாலும், எப்போதும் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டே இருப்பார் நிவேதித்தா. அவரைப் பார்த்து விவேகானந்தர் சொன்னர்: "அம்மா, நீ ஆனந்தமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்; கலகலப்பாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் நீ விரும்பும் ஜீவன் முக்தி உனக்குக் கிடைக்கும்" என்று. இந்த அறிவுரையை வலியுறுத்துவதற்காக ஒரு சுவையான கதையையும் சொன்னர்.

ஒரு காலத்திலே, நாரதர் வானுலகத்தை விட்டுப் பூமியில் இறங்கி, ஒருஅடர்ந்த காட்டுவழியாகப் போய்க்கொண்டிருந்தார். நடுக்காட்டிலே ஒரு ரிஷி தலைகீழாக நின்று தவம் செய்துகொண்டிருந்தார். இந்தக் காட்சியைக் கண்டதும் நாரதருடைய நண்பர் "நாரதரே, இந்த ரிஷிக்கு எப்போது ஜீவன் முக்தி கிடைக்கும்?" என்று கேட்டார். உடனே நாரதர், "இவனுக்கு இன்னும் மூன்று பிறவிகளுக்குப் பின்னல் முக்தி கிடைக்கும்" என்று சொன்னர். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ரிஷி 'ஓ' என்று அலறினர். "ஐயோ இன்னும் மூன்று பிறவிகளா? என்னல் பொறுக்கமுடியாது" என்று கதறினர். ரிஷியைத் தாண்டிச்சென்றுர் நாரதர். நூறடிக்கு அப்பால் ஒரு இடையன், மாமரத்தடியில் உல்லாசமாக ஆடுமேய்த்துக்கொண்டிருந்தான். "இவனுக்கு எப்போது ஜீவன் முக்தி?" என்று நாரதரைக் கேட்டார் அவர் நண்பர். நாரதர் சொன்னர்: இந்த மாமரத்தில் எத்தனை இலைகள் உண்டோ, அத்தனை பிறவிகளுக்குப் பின் இவனுக்கு முக்தி கிடைக்கும்" என்றுர். இதைக்கேட்ட இடையனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. "எனக்குக்

கூடவா ஜீவன் முக்தி கிடைக்கப்போகிறது!" என்று சொல்லிக் கொண்டே ஒரு ஆட்டம் ஆடினுன் அவன். அந்தக்கணத்தி லேயே அவனுக்கு ஜீவன்முக்தி கிடைத்துவிட்டது.

ஆனந்தமில்லாத வாழ்க்கை பயனற்ற வாழ்க்கை. ஆனந்த மில்லாத சமயம் பயனற்ற சமயம். ஆகவே நீட்ஸ்கே (Nietzche) என்ற ஜெர்மன் தத்துவ ஞானி சொன்னுர்: 'How Can I believe in a god who wouldnot dance?' என்று. அதாவது "ஆடத் தெரியாத கடவுளை நான் நம்பத் தயாரில்லை," என்று சொன்னுர்.

நீட்ஸ்கே காலத்திலுள்ள ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் சிலுவையின் உட்பொருளாகிய தியாகத்தை மறந்து, புறப்பொரு ளாகிய துன்பத்தைப் பாராட்டி, அல்லற்படுவதே வாழ்க்கையின் நோக்கம் என்று தவருகக் கருதிவந்தார்கள். இக் கருத்தின் விளைவாக ஐரோப்பிய சமுதாயத்தின் துன்ப உணர்ச்சி பரவியது.

"இறைவன் இன்ப வடிவானவன், துன்ப வடிவானவன் அல்ல," என்பதை வற்புறுத்துவதற்காகவே, நம் முன்னேர்கள் அவனை ஆடல் வல்லான் என்றும், ஆடல் அரசன் என்றும் போற்றி வணங்கினுர்கள்; நடராஜ தத்துவமே ஆனந்ததத்துவம் என்பதை உணர்ந்து அனுபவித்தார்கள்.

" ஆடவல்லார் நெறி ஆட அறிகிலேன்
பாடவல்லார் நெறி பாட அறிகிலேன் "

என்று சொன்னுர் திருமூலரும்.

ஆனந்தம் மேலிடும்போது, மயில் தன் தோகையை விரித்து ஆடுகிறது. நடனமே ஆனந்தத்தின் பரிபூரண வெளியீடு: அப்படியானுல், இன்பவடிவான இறைவன் ஆடிக்கொண்டு தானே இருக்கவேண்டும். ஆடும் தன்மை அவனுக்கு இல்லை யென்ருல், அவனுக்கு ஆனந்தம் இல்லையென்ருகிவிடும். ஆனந்தம் இல்லையென்ருல், அவனைக் கடவுள் என்று எவ்வாறு ஒப்புக்கொள்வது! ஆகவேதான், " ஆடத்தெரியாத கடவுளை நான் நம்பத் தயாரில்லை " என்று சொன்னுர் நீட்ஸ்கே.

# அப்பரடிகளின் மதமாற்றம்

**டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன்** எம். ஏ., பிஎச். டி.

## 'பொன்னார் திருவடி'

'திருத்தூங்கானை மாடம்' என்று பெண்ணாகடத்துத் திருக்கோயில், தேவாரத் திருமுறைகளில் வழங்கப்பெறும். இத் திருக்கோயில் மிக்க பழமை உடையது ஆகும். இத்தலத்து இறைவர் திருப்பெயர் 'சுடர்க்கொழுந்து நாதர்' என்பது. திருநாவுக்கரசர் பாடிய நான்காம் திருமுறையில், இத்திருத்தலத்திற் பாடப்பெற்ற ஒரு பதிகம் உள்ளது. அப்பதிகம் திருவிருத்தம் என்ற தொகுப்பினைச் சேர்ந்தது. அப்பதிகத்தில் மூன்று திருப்பாட்டுக்களே இப்போது காணக்கிடப்பன. ஏனைய திருப்பாட்டுக்கள் காணப்பெறவில்லை. கிடைத்திருக்கும் திருப்பாட்டுக்கள் மூன்றும், 1, 2, 10 ஆகிய எண்கள் உடையன என்று கொள்ளப் பெற்றுள்ளன. சேக்கிழார் கூற்றால் இப்பதிகம் 'பொன்னார் திருவடி' என்று தொடங்கிற்றெனக் கொள்ளப் பெறுவதால் முதற் பாடல் அதுவே ஆகும்.* இறுதிப் பாட்டில், இராவணன் பற்றிய செய்தியைக் குறித்திடும் இயல்பினர் அடிகள். ஆதலின் மூன்றாவது பாடல், பத்தாவது பாடலாகக் கொள்ளத்தக்கதே. வேறு ஏதும் கிடையாத வரையில், இடையில் உள்ளதை இரண்டாவதாகக் கொள்ளத் தடையில்லை.

## மூன்று விண்ணப்பங்கள் :

இத் திருப்பாட்டுக்களில் மூன்று விண்ணப்பங்கள் திருநாவுக்கரசுப் பெருமானாரால் செய்யப் பெற்றுள்ளன : அவை : (1) மூவிலைச் சூலம் தம்மீது பொறிக்க வேண்டுதல். (2) திருவடித் திருநீறு தம்மீது பூசிடவேண்டுதல். (3) இடபம் தம்மீது பொறிக்க வேண்டுதல். இவற்றைக் குறிக்கும் அடிகளார் அருட்டொடர்கள் வருமாறு :

"மின்னாரும் மூவிலைச் சூலம் என்மேற்பொறி"

"தேவா திருவடி நீறென்னைப் பூசு"

"இடபம் பொறித்தென்னை ஏன்று கொள்ளாய்"

---

* "பொன்னார்ந்த திருவடிக்கென் விண்ணப்பம் என்று எடுத்து" - பெரிய. பா. 1421. சமாசப் பதிப்பு (1950)

இவ்விண்ணப்பங்களை இங்கு அடிகளார் விடுக்கக் காரணம் என்ன என்று சிந்தித்தல் வேண்டும். சூல முத்திரை, இடப முத்திரை ஆகியவற்றைத் தம்முடம்பின்மீது பொறித்திட வேண்டும் என்று வேண்டுவதன் அடிப்படை யாது? அக்காலத்தே அடியார்கள் - சிவநெறி அன்பர்கள் அனைவரும் இவ்வாறு முத்திரை யேற்றுப் பொலிந்தார்கள் என்று கூறவும் முடியாது. அடிகளார்க்கு முன்னே பின்னே வேறு யாரும் இவ்வாறு வேண்டிப் பெற்றதாக நாம் காணவும் இயலவில்லை. வேறு யாரும் செய்யாத விண்ணப்பத்தை, சமகாலத்து வாழ்ந்த திருஞான சம்பந்தரும் செய்யாத விண்ணப்பத்தை அடிகளார் செய்தமைக்குரிய காரணம் என்ன?

## அடிப்படை நோக்கம் :

சமணசமயத்திற்குச் சென்று மீண்டு, திருப்பாதிரிப் புலியூரில் கரையேறி, சிவநெறி விளக்கம் கண்டுவரும் திருநாவுக்கரசர் பெண்ணாகடம் போந்து இப்பதிகம் பாடுகின்றார் என்று பெரிய புராணத்தால் அறியலாம். திருவதிகையில், தம்முன்பு பிறந்த தமக்கையார், 'திருவாளன் திருநீறு' அளிப்ப, 'பெருவாழ்வு வந்தது' எனப் பணிந்து ஏற்று 'உருவார அணிந்து' சிவநெறிக்கு மீண்டவர் அப்பர் அடிகள். மதமாற்றம் பெற்று, 'கூற்றாயினவாறு' என்று பாடத் தொடங்கியவர்; 'தம்மையும் எடுத்து ஆண்ட' முதல்வன் கருணைக் கடல் மூழ்கித் துளையம் ஆடியவர்: இறைவனின் பெருங்கருணையால், தாம் சமண சமயத்தினின்று மீட்கப் பட்டமை பற்றிய நன்றியுணர்வு அடிகளார் உள்ளத்தில் நிரம்பியிருந்தது. திருவதிகையில் இறைவன் தம்மை ஆட்கொண்டாலும், தம்மை முற்றும் இறைவன் தூய்மைப் படுத்திக் கொண்டு அடியானாக்கிக் கொள்ளவேண்டும் என்ற உறுதியான நினைவு அடிகளார்க்கு இருந்தது. அந்த நினைவு, அவர் மேற்கொண்ட யாத்திரையில் பெண்ணாகடத்தே திருக்கோயில் வழிபாட்டில் அவர்க்கு மேம்பட்டு நின்றதாதல் வேண்டும்.

## ஆரூர்ப் பதிகத்தில் :

திருவாரூர்த் திருப்பாட்டொன்றில்,

"பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாம்
குண்டர்கள்தம் சொல்லே கேட்டு,
உருகுவித்துஎன் உள்ளத்தின் உள்ளிருந்த
கள்ளத்தைத் தள்ளிப் போக்கி
அருகுவித்துப் பிணிகாட்டி ஆட்கொண்டு
பிணிதீர்த்த ஆரூரர்"

என்று பாடி உருகுவர் அடிகள். இவ்வாறே,

"குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார் நகை
நாணுதுழிதர்வேனைப்
பண்டமாப் படுத்தென்னைப் பால்தலையில்
தெளித்துத்தன் பாதங்காட்டி"

என்று பாடுவதனால், திருவாரூரில், அடிகள் தலையில் பால் தெளித்துப் பரிசுத்தப்படுத்தித் திருவடி சூட்டிய நிலை அறியப்படும். இதுவும் அக் கால வழக்காக ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றாகும்.

### பொருள் நோக்கம்:

என்னுடைய ஆவியைக் காப்பதற்கு இச்சை உண்டாயின், கூற்றுவனால் வரும் துன்பம் அகல, "ஒளி பொருந்திய மூவிலை வடிவாகியசூலத்தை என்மேற் பொறித்தருள்க" என்றவிண்ணப்பம் முதலாவது ஆகும். 'கூற்று' என்பதற்கு, '(சமணர் தொடர்பு கொண்டவன் என்ற) சொல்' என்றும் பொருள் கூறுவர். (திருப்பனந்தாட் காசிமடத்துப் பதிப்பு - அப்பர் தேவாரம் (1949) பக். 375 - அடிக்குறிப்புக் காண்க). 'ஆவி காப்பதற்கு இச்சை யுண்டேல்' என்ற தொடர்க்குப் பொருத்தமாகக் 'கூற்றுவன்' என்று பொருள் உரைத்தல் ஏற்புடைத்தாக உள்ளது. 'திருவடி நீறென்னைப் பூசு' என்றும், 'இடபம் பொறித்தென்னை ஏற்றுக் கொள்ளாய்' என்றும் கூறும் விண்ணப்பங்களும், தம்முடைய திருத்தொண்டை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக இவற்றைப் பொறித்தருளித் திருநீறு வழங்கியருள வேண்டும் என்ற உட்குறிப்புடையனவாகவே உள்ளன

### வரலாற்றுப் பின்னணி:

அப்பர் காலம் பல்லவர் தமிழகத்தை ஆண்ட காலம், பல்லவர்க்கு விடை (நந்தி, இடபம்) இலச்சினை. நந்திக் கொடி உடையவர் பல்லவர். பல்லவர் காசுகளிலும் நந்தி அல்லது இடபம் இருத்தல் அறிஞர் கண்ட ஒன்றே. [ Walater Elliet's coins of South India's Nos. 31 - 38, 65, 67 ] பல்லவர் வெற்றிப் பெயர்களுள் ஒன்றாகிய 'விடேல் விடுகு' என்பது வெற்றிப் பெயர் அன்று. 'வெற்றியுடைய நந்தி இலச்சினையோடு விடுதல் பெற்ற (விடப் பெற்ற ஆணை)' என்ற பொருள் உடையதே என்று துணிவர் டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார். [பல்லவர் வரலாறு (1944) பக். 221 - 222; விடை — வெல் — விடுகு என்று பிரித்துப் பொருள் கண்டுள்ளார்; 'இப்பொருள் சரியா என்பது ஆராயத் தக்கது' என்று மேலும் சிந்தனைக்கு

வழிவகுத்துள்ளார் இப் பேரறிஞர்]. ஆகவே சிவநெறியாளர் இடப இலச்சினை ஏற்றல் பொருத்தமாகவே உள்ளது.

**சேக்கிழார் கருத்துரை :**

சேக்கிழார் அப்பரடிகளின் விண்ணப்பங்களை இந்த நெறியில் நோக்கியிருக்கின்றார். எந்த அடிப்படையில் இவை எழுந்தன என்று சிந்தித்து உரைத்துள்ளார். திருவதிகையை விட்டுப் புறப்பட்டுப் பிற தலங்களையெல்லாம் வழிபட்டுத் தொண்டாற்ற வேண்டும் என்ற வேட்கையினால் உந்தப்பட்டு, அப்பரடிகள் வரும்போது திருத்தூங்கானைமாடத்தை எய்தினார்.

> " புன்னெறியாம் அமண்சமயத் தொடக்குண்டு போந்தவுடல்
> தன்னுடனே உயிர்வாழத் தரியேன் நான் தரிப்பதனுக்கு
> என்னுடைய நாயக ! நின் இலச்சினையிட் டருள்' என்று
> பன்னுசெழுந் தமிழ்மாலை முன்னின்று பாடுவார் "

என்கின்றார் சேக்கிழார். * அமண்சமயத்துடன் தொடர்பு கொண்ட உடலுடன் வாழத் தரியாதவராய், இலச்சினைபொறித்துத் தூய்மைப்படுத்திட அடிகள் வேண்டினர் என்பது சேக்கிழார் கருத்தாதலை இப்பகுதி தெளிவாக்கும்.

**அக்கால வியல்பு :**

மதமாற்றம் செய்தோரைத் தூய்மைப் படுத்துவதற்கு, இலச்சினைகளைப் பொறித்துக்கொள்ளுதலும் அக்கால வழக்காக இருந்தது என்று இதன் வாயிலாக அறிய முடிகின்றது. குறிப்பாகச் சிவநெறியிலிருந்து புறநெறிக்குச் சென்று, மீண்டவர்கள் சூல இலச்சினையையும், இடப இலச்சினையையும் திருநீற்றுடன் பெற்று மாறுவது அப்பரடிகள் வரலாற்றிலிருந்து தெளிவாகின்றது. 'ஒப்பக் காண்டல்' என்னும் உத்திபற்றி இக்கட்டுரையின் முற்பகுதியிற் காட்டிய பாட்டின்படி, பால் தலையில் தெளித்துத் தூய்மைப்படுத்துவதும் அக்கால வழக்கே என்றும் அறியலாம். ‡ அப்பரடிகளின் மதமாற்றம் பற்றிய சிந்தனையில், நாட்டு வரலாற்றை யொட்டிய ஒரு புதிய வழக்காற்று விளக்கமாக இதனைக் கொள்ள வேண்டியுள்ளது.

---

* Ibid - பா. 1420.

‡ "பால் முதலிய பஞ்சகவ்யத்தைத் தலையில் தெளித்து மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் அறுவகை நெறிகளாலும் தம்மைச் சோதித்துத் தீக்கை செய்து" என்று பொருள் காண்பர் திரு. க. வெள்ளைவாரணன் அவர்கள். ( பார்க்க : பன்னிருதிருமுறை வரலாறு - (1962) பக். 551)

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 32. இதழ் 5. பக்கம் 245 இன் தொடர்ச்சி )

## 61. மண்சுமந்தது

பண்சுமந்த மறைகளாலும் நாடரிய பரம்பொருளின் பதஞ் சுமந்த முடியராம் மணிவாசகரின் உள்ளம் புண்சுமந்த துயர் நீங்க வந்த பரிகளெல்லாம் நரிகளாகிக் கானில் ஓடின. இனி விடையவன் அவருக்காக மண்சுமந்த வரலாற்றைக் காண்போம்.

வைகை கரைபெருகி ஆர்ப்பது கண்டு காவலன் அமைச்சரை உடன் ஆவன செய்யச் சொன்னான். அமைச்சரும் குடிமக்களை அழைத்து அவரவர்க்கும் கோல் நாட்டிக் கரை யளந்து கொடுத்து அடைக்கக் கூறினர். அப்படியே மண் சுமந்து வருவோரும், மரஞ்சுமந்து வருவோரும், வைக்கோல் கொண்டு வருவோருமாக ஆட்கள் பல்லாயிரவர் அங்கே குழுமினர். அவர்கள் கரையை உயர்த்த உயர்த்த அந்த அள விற்கு வைகையும் வேகமாகப் பெருகியது.

இந்நிலையில் அந்நகரில் ஈசன் திருவடியில் எல்லையில்லா அன்புகொண்ட ஓர் நரை மூதாட்டி பிட்டு விற்கும் பிள்ளை யில்லாத வந்தி, மீனவனின் இந்த ஆணை கேட்டாள். வைகலும் தான் அவித்த பிட்டினை முக்கட் கரும்பாம் இறைவற்கு ஊட்டியே வாணிபம் செய்வாள். தனக்கோர் மகனுமில்லாமல் தமரின் துணையுமில்லாமல் கலங்குமவள் என்செய்வாள் பாவம்; ஆல வாய்ப் பெருமானை அகமுருக வேண்டினாள். 'வேந்தன் வெகுளு முன் கூலியாள் யாராகிலும் வரவேண்டுமே' என்று தளரும் அவளைத் தாங்கும் பொருட்டு தயாபரனே கூலியாளாய்வந்தான்.

### வேதமுதல்வன் புனைந்த வேடம் :

குண்டோதரனுக்கு அன்னமிட்டபோது அவனது தாகத் தைத் தணிக்கத் தன்தலையிலிருந்த கங்கையைப் பூவுலகிற்கு வரவழைத்தார். அன்று பிரிந்த அவளைக்காண அளவற்ற ஆர்வங்கொண்டார்; உமைக்கு உருத்தெரியாமல் இருக்கவேண்டு

மென்று அழுக்கடைந்த பழந்துணியை அரையில் கட்டி, தொண்டர் குழாம் தந்த இண்டைமாலைபோல் சும்மாடுகோலி, அதன்மேல் கூடையைக் கவிழ்த்துக்கொண்டு, எட்டுத் திசையிலும் விரிந்து பரந்த பெரிய தோளில் மண்தொடு படையேந்தி, புறப்பட்டார். தாய் முலைப்பால் வேட்டு விரைந்துவரும் இளங் குழவிபோல் வந்திபால் வந்தார்.

'கூலிகொடுத்துஎனைவேலைகொள்வாருண்டோ' என்று கூவி வரும் தெய்வத்தை, மகனை அழைப்பதுபோல் மகிழ்ச்சிபொங்க அழைத்தாள். 'மைந்த! எனக்களந்த கரையடைத்துத் தருவாயா?' என்று பரிவோடு கேட்டாள். 'கூலியென்னதருவாய்' என்று வந்தவன் கேட்க, 'பிட்டையே கூலியாகத் தருவேன்' என்றாள் வந்தி. 'உதிர்ந்த பிட்டை வயிற்றுப் பசிதீர முன்னே தந்திடுக, பின்னே உன்பங்கு வேலையைச் செய்துவிட்டுக் கூலி பெற வருகிறேன்' என்று நயமாகப் பேசினன் கூலியாள்.

அவளும் இசைந்து பிட்டைப் பார்த்தாள். எல்லாமே திருவருளால் உதிர்ந்திருந்தது. நன்று என்று சிக்கடைந்த ஆடையிலிருந்து பிட்டை எடுத்து, விரித்து ஏந்தும் அவன் புறத்தானையில் போட்டாள். கன்னங்களையொற்றி நாக்கால் ஒலியெழுப்பி ஒள்ளியது என்று அவளன்பையும் உடன்கூட்டி அமுது செய்தான். அன்னைதரும் அமுதத்தையும் இது விஞ்சுவதாக இருக்கிறது. இது திருவாலவாய்ப் பெருமானுக்கே ஆகுமென்று சென்னியசைத்துச் சுவைத்துண்டான். 'தந்தையும் தாயுமில்லாத எனக்கு நீ தாயாயிருந்து களைப்பைப் போக்கினய். ஆகையால் இனி உன்பொருட்டு வேலை செய்யப்போகிறேன்' என்று சொல்லிப் புறப்பட்டான்.

## புந்தியால் உணர்வறியார் பொருந்தவே கரையடைத்தார் :

வைகைக்கரைக்கு வந்து வந்தியாளென்று ஏட்டில் பதிந்துகொண்டு மண்ணை வெட்டுவதும் முடிமேல்வைப்பதுவும், பாரமென்று கொட்டுவதும், சுமடுவிழக் கூடையைத் தட்டுவதுமாகப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தார். இப்படி இவர் ஒரு தடவை மண்சுமப்பதற்குள் கரமென்னும் மலர்கன்றி கதிர் முடியில் வடுவும்பட்டது. ஆகவே அயர்வுமிக்கவராய் ஒருபுறம் துயிலத் தலைப்பட்டார்..

தருமேவு மலைகளும் சலமகளு மறியாமல்
திருமேனி முழுதுநில மகடீண்டித் திளைப்பெய்த
குருமேவு மதிமுடியைக் கூடையணை மேற்கிடத்தி
வருமேரு வனையார்தாம் வடிவுணர்ந்து துயில்கின்றார்.

உமையும் கங்கையும் அறியாதபடி தன்மேனி முழுதும் நிலமகள் தீண்டும்படி பூமியில் கூடையைத் தலைக்கடியில் வைத்துக் கொண்டு துயின்றார் பெருமான். சற்றைக்கெல்லாம் எழுந்து ஆடுதலும் பாடுதலுமாகவே பொழுதைக் கழித்தார். பின்பு வேலைசெய்து களைத்தாற்போல நெடுமூச்செறிந்து வாயொலி யால் காற்றழைத்து நெடும்பசி கொண்டவர்போல் வந்தியிடம் வந்தார். 'பாண்டியனின் ஆணைப்படியே எல்லோரும் கரையை உயர்த்திக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு மிகவும் பசிப்பதால் இப்போது அதனைப் போக்க பிட்டுதருக' என்று கேட்டார். அவள் தந்த பிட்டைச் சுவைத்துண்டபின் மீளவும் கரையடைக்க வந்தார்.

மண்ணை வெட்டி வேற்றுப்பங்கில் போடுவார். வேலை செய்வதுபோல் செய்து திடீரென்று ஆற்றில் விழுவார். மர மொன்றைப் பற்றி மிதப்பார். சுழியிலாழ்வார். சேண் தூரஞ் சென்று கரையேறுவார். பின் துணியில் கட்டப்பட்டுள்ள பிட்டைத் தாமும் உண்டு மற்றையோருக்கும்தருவார். மேலாளர் கள் இதனைக் கவனித்து பிரம்பு கொண்டு அடிக்க வந்தால் இருகைகொட்டி நகைப்பார். தத்துவ முணர்ந்த ஞானிகள் ஞானக்கண்ணால் மட்டுமே காணத்தகுந்த கடவுள் இங்கே மக்களின் ஊனக்கண்ணில் படும்படி விளையாடி மகிழ்ந்தார்.

**உயிர்களில் ஒளித்தவன் சிவன் :**

கரையைப் பார்வையிட வந்தவர்கள் வந்தியின் பங்கு அடை படாமலும் அக் கரை கட்டுவோரின்றியும் இருக்கக் கண்டார்கள். விசாரிக்கவே, வந்தியாளாய் வந்தவனைக் கண்டு காரணம் கேட்டார்கள். கூலியாளோ, ஒன்றுக்கும் அஞ்சாமல் நின்றான். மன்மதனைப் பழிக்கும் அவ்வெழிலாளனை அடிக்கவும் மனமின்றி மயங்கினார்கள். 'இவன் பித்தனோ' அன்றி உன்மத்தனோ! இல்லை நம்மையலைக்க வந்த எத்தனோ! இல்லையானால் இந்திர சாலங்காட்டும் சித்தனோ' என்றெல்லாம் எண்ணினார்கள். 'வேலைசெய்து பழக்கப்படாதவன்போலும், உடம்பே அதனைச் சொல்கிறதே, நாம் இதனை அப்படியே வேந்தனிடம் தெரிவித்து விடுவோம்' என்று கூறி அப்படியே செய்தார்கள். அடைத்த பங்கைப் பார்வையிட பார்த்திபனும் வந்தான். செல்வக்காளை போல் தன் பங்கை அடைக்காமல் நின்ற வந்தியின் ஆளைக் கண்டான். கோபங்கொண்டு கைப்பிரம்பால் அவன் முதுகில் ஓங்கியடித்தான். ஒருகூடைமண்ணை உடைப்பில் கொட்டி மறைந் தான் அந்த ஆள். அவன் முதுகிலடித்த அடி மறுகணம் பாண்டியன் முதுகிலும், பத்தினியர் மேலும், அமைச்சர் மேனி யிலும் பட்டது. அதோடு நில்லாமல் அசையும் அசையா உயிர்

யாவற்றிலும் அந்த அடிபட்டது. பரிதி மதி முதலிய கோள்கள், நிலம் புனலென்ற பூதங்கள், வானவர் மனிதர், நரகர், புள், விலங்கு, மாசுணம், சிதல், எறும்பு, ஏன் ஊனடை கருவும் பட்டது என்றால் வேறென்ன சொல்வது!

துண்ணென்ற அடிபட்டு மாயோன் விழித்தான். கமலப் புத்தேள் என்னென வியந்தான். இயக்கர், சித்தர் யாவரும் புண்பட்டனர். ஆனால் அது புகுந்தவாறு அறிந்திலர்.

அந்த வேளையில் விண்ணிலிருந்து இறங்கிய விமான மொன்று என்புபோல் வெளுத்த நரைமூதாட்டியாம் வந்தியை ஏற்றிக்கொண்டது. சிவனருள் அடைந்தோர் மேவிய சிவபுரத்தில் அவளை உய்த்தது அது.

## மணிவாசகரின் மாண்புணர்ந்தான் :

கூலியாள் கொட்டிய ஒருகூடை மண்ணினால் உடைப்பு அடைபட்டதும், அந்த ஆள் மறைந்த தன்மையும், அவன்மேல் அடித்த அடி உலகவுயிர்கள் அத்தனை மேலும் விழுந்ததையும் கண்டு வேந்தன் வியந்து நிற்கும்போது ஆகாயவாணியால் இறைவன் கூறினான்; 'பாண்டியனின் பொருட்களைத் தமக்கும் தம்மடியார்க்குமாக வாதவூரர் செலவு செய்ததிலிருந்து வைகையில் வெள்ளம் வரச்செய்தது; வந்திகைப் பிட்டுண்டு அவளை வானேறச் செய்ததுவரை எடுத்துக்கூறி, இத்தனையும் என் அன்பன் மணிவாசகர் பொருட்டு நிகழ்த்தினேன், இனி நீ அவரைப் பெருமைப்படுத்தி, செல்வம் சிறக்கப் பன்னெடுங்காலம் அரசாள்வாய்' என்று எம்பெருமான் அருள்செய்தான்.

இறைவனருளாணையை மேற்கொண்டு மாசில்லாத் தொண்டரைத்தேடிப்போய்த் திருவாலவாய்க்கோயிலுள் அவரைக்கண்டு அடிபணிந்தான் அரிமருத்தனன். மணிவாசகரின் தூய்மையை இறைவனே உணர்த்திவிட்டான். ஆகையால் அவர் திருவடி வணங்கி, தான் அறிவில்லாமல் ஆராயாமல் செய்த பிழைகளைப் பொறுக்க வேண்டினான். இவ்வரசாட்சியையும் ஏற்று என்னையும் அடிமைகொள்ள வேண்டும் என்ற மன்னனின் வேண்டுகோள், மண்ணாசை முதலிய மூவாசைகளையும் வெறுத்த மணிவாசகருக்குச் சிரிப்பைத்தந்தது. 'இறைவனது கழல்களே எனக்கு இனி வேண்டுவது. இந்தப் பாரமெல்லாம் எனக்கு ஏன்? இந்திரனைப்போல சிறக்க நீரே இதனை ஆண்டருள்க. உம்பால் சிலகாலம் நான் பணிபுரிந்ததாலே ஞானமும் பக்தியும் கைவரப்பெற்றேன். அடியேன் ஞானவெளியாம் பொன்னம்பலம் காண நாட்டமுற்றேன். செல்ல விடைதர வேண்டும்' என்று பணிந்து மொழிந்தார் அரசனும் இசைந்து அவர் பின்னே வெகுதூரம் நடந்துபோய் விடை கொடுத்தான்.

### மன்றுளாடிய மலர்க்கழல் பணிந்தான் :

தன்கைப்பிரம்பால் அடிபட்டுப் புண் சுமந்த தெய்வத்தைப் பணிந்து பலவாறு போற்றினன் பாண்டியன். 'கமலக்கண்ணனாகவும், பிரமனாகவும் இன்னும் எண்ணிறந்த பல்லுயிராகவும் நீ இருக்கிறாய் என்றுதான் எண்ணியிருந்தேன். உன் முதுகில் அடித்தஅடி என் முதுகிலும் பட்டபோது அடியேனும் உன் திருமேனி ஆயினபாங்கை அறிந்து வியந்தேன். எனக்கு இம்மை மறுமைப் பயன்காட்டும் நல்லமைச்சர் உம்அருள் பெற்றவர் என்பதை அறியாமல் அவருக்குக் கொடுமை பல செய்தேன். அவர் பொருட்டும் வந்தியின் பொருட்டும் வந்த உம்மை எப்படிப் போற்றுவேன்?'

" அன்றுசிறுத் தொண்டரிடும் பிள்ளைக் கறியமுதும்
மென்று சுவைதெரிந்த வேடனிட்ட வூனும்போல்
நன்றுநரை யாட்டியிடு பிட்டு நயந்தருந்தி
என்று மடியார்க் கெளிவந்தா யெந்தாயே."

இப்படியாக உருகி வேண்டிப் பலநாள் வழிபட்டான். பின் பாண்டியர் குலம் விளங்க அவன் வயிற்றில் சகநாதன் பிறந்தான். அம்மகனை வளர்த்து முடிசூட்டி அரசனுக்கி அரிமருத்தனன் மும்மலத் தொடர்பு நீங்கி முக்கண்மூர்த்தி திருத்தாளின் நிழலடைந்து இன்புற்றான்.

### வாதவூரர் விளைத்த சிவபோகம் :

வழுதிபால் விடைகொண்டு புறப்பட்ட வாதவூரர் பலப்பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு இடதுபதம் தூக்கி இறைவனுடும் தில்லையை வந்தணைந்தார். குருந்தடியில் வந்தாண்ட திருவுருவமே இங்கும் குறுமுறுவலுடன் நின்று வாவென்றழைக்கும் காட்சிகண்டார். மனமென்ற நிலத்தில் முளைத்திருந்த பொறிகரணங்களென்ற காட்டுக்கொடிகளை ஐந்தெழுத்து என்ற வாள்கொண்டு துணித்தெறிந்து மனதைப் பண்படுத்திச் சிவமாம் விதைவிதைத்தார், பசுபோதமென்ற களைபிடுங்கி அருளென்ற நீர்பாய்ச்சி அறிவென்ற பயிர்வளர்த்து பரமானந்த அமுதைத்தற்போதத்தால்நுகராது சிவபோதத்தால் நுகர்ந்தார்.

இப்படியாகத் தில்லையில் தங்கியிருக்கும் நாளில் புத்தர்கள் தில்லைவாழ் அந்தணர்களை வாதிற்கழைத்தனர். அந்தணர்கள் சிவனருளை நம்பி அவர்களை ஏழுநாட்களுக்குள் வெல்வதாகச் சபதமிட்டனர். சிவபெருமான் அவர்கள் கனவில்தோன்றி வாதவூரரைக் கொண்டு வெல்ல வழி சொல்லிக்கொடுத்தான். திருவருளாணைப்படியே அவர்களும் வாதவூரரை அழைத்தனர்.

ஆனல் வாதவூரர் வர மறுத்துவிட்டார். பின்னும் நடராஜப் பெருமான் அந்தணர்கள் கனவில்வந்து, ' நாம் அவனைக் குருந்த மரத்தடியில் ஆட்கொண்டபோது இட்ட பெயரான மாணிக்க வாசகர் என்ற பெயர் சொல்லி அழையுங்கள்' என்று உத்தி கூறினர். தில்லைவாழ் அந்தணர்கள் அப்படியே ' மணிவாசகரே! நீரே. புத்தர்களை வாதில்வெல்ல வல்லவர். அதனை நிறைவேற்ற வருக' என்றழைக்க, இறைவனது திருவருளை வியந்து அடிகளும் வந்தார். சைவர்கள் பல்லாயிரவர் நெருங்கியிருந்த இடம்வந்து புத்தர்களைத் தனியே வைத்து 'உங்கள் தெய்வம், வேதம் உங்கள் மதம் சார்ந்தார் அடையும் பயன் மூன்றையும் சொல்லுங்கள்' என்று அடிகள் கேட்டார். அவர்களது கொள்கைகளைக் காட்சியளவை ஒன்றினலேயே மறுத்து அவர்களையும் இணங்கச் செய்தார்.

பின்பு அவர்கள் மணிவாசகரைநோக்கி 'உங்கள் கடவுளை ஆகம அளவைகொண்டு காட்டுக' என்று வேண்டினர். மணி வாசகர் நகைத்து, பிறவிக்குருடனுக்குக் கதிரோனைக் காட்டுவது எப்படி? மறை, அளவை, தேவர்களுக்கெட்டாத மனம் வாக்கால் அறியமுடியாத எம்பெருமானைத் திருநீற்றுத் தொண்டின் வழியிலன்றிக் காணமுடியாது என்ருர். தேற்றமில்லாத புத்தர்கள் அதனை எங்கட்குத் தெளியக் காட்டுங்கள் என்ருர்கள். 'நான் காட்டினபின் உங்களுக்கு என்ன தண்டனையிடுவது? அதனையும் நீங்களே கூறுங்கள்' என்று வாதவூரர் கேட்க, 'எங்களைச் செக்கிலிட்டு ஆட்டுங்கள்' என்றனர் புத்தர்.

மணிவாசகர் பசுவின் உலர்ந்த கோமயத்தை நெருப்பிலிட்டார். அது சிவந்து எரிந்து சாம்பல்பூத்து நின்றது. இப்படியே எங்கள் பெருமானின் செம்மேனியில் வெண்ணீறுள்ளது என்று எடுத்துக் காட்டினர். புத்தர்களை மணிவாசகர் வென்ற செய்தியறிந்து ஈழமன்னன் தன்மகளின் ஊமைத்தன்மையுங்கூட நீங்குமாறல் மணிவாசகர் வென்றதை ஏற்பேனென்ருன். அப்படியே அங்குவந்த ஊமைப் பெண்ணிடம் இறைவனின் கீர்த்திகளை வினக்களாகக் கேட்க அவள் பதிலைப் பாட்டாகப் பாடினள். (திருச்சாழல் என்ற திருவாசகப்பகுதி).

ஈழமன்னன் இதனைக் கண்டு வியந்து புத்தர்களை அவர்கள் வாய்மொழிப்படியே தண்டித்துத் தானும் சைவசமயம் சேர்ந்தான். தில்லை மூவாயிரவரையும். மணிவாசகரையும் வெகுவாகக் கொண்டாடி, மன்றுள் ஆடும் பெருமானையும் வணங்கியின்புற்ருன்.

சிவனருள் விளக்கவந்த மாணிக்கவாசகரும் நடராஜப் பெருமான்மேல் திருவாசகம்பாடி பன்னள் அங்கிருந்து பணிந்து பின்பு இறைவனின் சோதியோடு கலந்தின்புற்ருர். (வளரும்).

# வாழ்வும் வளமும்

மக்களின் இன்ப வாழ்க்கைக்கு முதலாய் இருப்பது வளம். இதனை, 'நீர் வளம், நில வளம், குடி வளம்' என மூன்ருகக் கூறுவர். இவற்றுள் நீர் வளத்தை, "இருபுனலும், வாய்ந்த மலையும், வருபுனலும்" எனக் குறிப்பார் திருவள்ளுவர்.

பருவ மழை தவருமையும், வேண்டிய இடத்தில் ஊற்றுநீர் எளிதில் மிகக் கிடைப்பதும் இருபுனல்களாகும். கோடையிலும் அருவியை மிகத் தருவது வாய்ப்பான மலை. வற்ருது ஓடும் ஆறுகளே வரு புனல். நில வளத்தை "ஆற்ற விளைவது" எனவும், குடி வளத்தை, "தாழ்விலாச் செல்வர்" எனவும் திருவள்ளுவர் குறிப்பிடுவார்.

இத்தகைய வளம் பொருந்திய நாட்டினை, 'தேவருலகம்' என்றே சொல்லலாம். இவ்வளங்கள் அனைத்திலும் முதலாவது பருவமழை. அதற்கு அடுத்தது நல்ல விளைவு. 'இவை இரண்டும் இயற்கையில் அமைய வேண்டுவன' என்று நாம் கருதலாம். ஆயினும் இவற்றிற்கும் காரணம் உள்ளதாகத் திருவள்ளுவர் கூறுகின்ருர்.

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு"

என்பது அக் குறள்.

பெயல் - பருவ மழை. விளையுள் - நல்ல விளைவு. இவை இரண்டும் ஒன்று சேர்ந்து, நீதி தவருத அரசனது நாட்டில் தான் இருக்கும் என்கின்ருர் அவர். இன்னும்,

"முறைகோடி மன்னவன் செய்யின், உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்"

என எதிர்மறையிலும் அவர் இதனைக் கூறுகின்ருர். 'நீதி தவறும் மன்னன் நாட்டில் மழை பெய்யாது போதல் ஏன் என்பவருக்கும் திருவள்ளுவர் பின் வரும் காரணத்தைக் கூறுகின்ருர்.

ஆபயன் குன்றும், அறுதொழிலோர் நூல்மறப்பர்,
காவலன் காவான் எனின்.

இக்குறளின் திரண்ட பொருள் 'கொடுங்கோல் ஆட்சியுள்ள நாட்டில் கடவுள் வழிபாடு நடைபெருது' என்பது. எனவே, மழை பெய்யாதொழிவதும், அதனுல் பஞ்சம் மிகுவதும், அது காரணமாக நாட்டில் அமைதி குன்றுவதும் முதலிய எல்லாத் தொல்லைகட்கும், நாட்டில் கடவுள் வழிபாடு குறைவதே காரணம் என்பது தெளிவாகின்றது. இவ்வாறே திருமூலரும்,

" ஆற்றரு நோய்மிக் கவனி மழைகுன்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர் ;
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றரும் பூசைகள் தப்பிடில் தானே "

" முன்னவ ஞர்கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள ; வாரி வளங்குன்றும் ;
கன்னங் களவு மிகுத்திடும் காசினி ;
என்னரு நந்தி எடுத்துரைத் தானே "

என்று அருளிச்செய்கின்ருர்.

'விஞ்ஞானம் மிக முன்னேறியுள்ள இக்காலத்திலும் மழையையும், கடவுள் வழிபாட்டையும் தொடர்பு படுத்திக் கூறிய பழைய பாடங்களை அப்படியே ஒப்பிப்பது மொட்டைத் தலைக்கும் முழங்காலிற்கும் முடிச்சுப் போடுவதுபோல் ஆகும்' என்று சிலர் நினைக்கலாம். ஆனுல், இது அனுபவத்தில் காணும் உண்மை.

விஞ்ஞானம், நிகழ்ந்தவை அல்லது நிகழ்பவை ஆகிய வற்றிற்கு, அவை எப்படி நிகழ்ந்தன - அல்லது நிகழும்' என்று கூறுகின்றதேயன்றி, 'அவ்வாறு ஏன் நிகழவேண்டும்' என்பதைக் கூறுவதில்லை; கூறவும் அதனுல் முடியாது' அஃதாவது ஒருவன் மற்ருெருவனை முன்பகை காரணமாக அடிக்கும்பொழுது அதனைப் பார்த்திருந்தவன் 'எப்படி அடித்தான்' என்று கூற முடியுமே தவிர, 'ஏன் அடித்தான், என்ன பகை' என்றுகூற முடியாது. அதுபோல்வதுதான் விஞ்ஞானத்தின் நிலைமையும், 'சூழ்நிலை எப்படி உருவானுல் மழை பெய்யும்' என்பதை விஞ்ஞானம் கூறுமேயன்றி, 'அத்தகைய சூழ்நிலை சில வேளைகளில் ஏன் உருவாகின்றது- சில வேளைகளில் ஏன் உருவாகவில்லை' என்பதை அது கூற முடியாது. ஒவ்வோர் ஆண்டிலும் மழைக் காலம்' என்று

குறிப்பிடப்படுகிற அந்தக் காலம் வரத்தான் செய்கிறது; வரத் தவறுவதேயில்லே. ஆனல், அந்தக் காலத்தில் மழை பெய்யா மலும் போகின்றது; மழைக்காலம் அல்லாத காலத்தில் மழை பெய்யவும் பெய்கின்றது. 'இவை ஏன்' என்பதற்கு, 'இயற்கை' என்பது போதிய விடையாகாது. ஏனெனில், 'இயற்கை' என் பது என்றும் ஒருவகையாய் இருப்பது; அவ்வாறின்றி மாறி மாறி வருவது செயற்கையே யல்லது இயற்கையன்று.

ஒருமுறை மழை இல்லாதிருந்தபொழுது திருப்புன்கூரில் உள்ளவர்கள், மழைபெய்தால் அங்குள்ள சிவன் கோயிலுக்குப் பன்னிரண்டு வேலி நிலம் விடுவதாக நேர்ந்துகொள்ள, மழை பெய்யத்தொடங்கி, விடாமல் பொழிந்து கொண்டிருந்தது. அதனல் அவர்கள், மழை நின்ருல் மற்றும் பன்னிரண்டு வேலி நிலம் விடுவதாகச் சொல்ல, மழை நின்றது என்பதைச் சுந்தர ரது தேவாரத்தால் அறிகின்ருேம்.

தேவார காலத்தில் மட்டுமன்றி சங்க காலத்திலும் தமிழ் நாட்டில் இத்தகைய செயல்கள் நிகழ்ந்து வந்தமை,

> " மலேவான் கொள்கென உயர்பலி தூஉய்
> மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
> கடவுட் பேணிய குறவர் மாக்கள் "

என்னும் கபிலரது புறப்பாட்டு வரிகள் தெரிவிக்கின்றன. 'மழையை வேண்டுங் காலத்துப் பெய்வித்தற்கும், வேண்டாக் காலத்து நிற்பித்தற்கும் கடவுட் பேணினர்' என்பதும், 'நின் மலேயில் குறவர் மாக்கள் கடவுட் பேணி மழை வேண்டிய பொழுது பெற்றுத் தாம் வேண்டும் உணவு நுகருமாறுபோல' என்பதும் இப்பாட்டின் பழைய உரையிற் காணப்படும் குறிப் புக்கள். இவற்றையெல்லாம் அறியாமையின்பாற்படுத்தி, இன்றைய விஞ்ஞானம் ஒன்றையே முற்றும் அறிவிப்பதாக நினைத்தல், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும். எனவே நாட்டின் பல்வகை வளங்கட்கும் இறைவழிபாடே அடிப்படைக் காரணம் என்பதை உணர்தல் வேண்டும். அவ்வாறு உணர்ந் தால், 'இவ்வழிபாட்டின் பொருட்டுப் பால் தயிர் முதலியவை களேக் குடம் குடமாகக் கொண்டுபோய்க் கொட்டியும், தானியங் கள் யாகத்தில் டன் கணக்கில் போட்டு எரித்தும் வீணுக்கு கின்ருர்களே' என்று எண்ணத் தோன்ருது. மாருக 'இவை யெல்லாம் பின் விளேவுக்காக முன்னே வீட்டில் உள்ள தானி யங்களேக் கொண்டுபோய் வயலில் விதைப்பது போன்றதுதான்' என்ற எண்ணம் உண்டாகும். மழை முதலிய இயற்கைச் சாதனங்களின் வழியாக நமக்கு எல்லாவற்றையும் உண்டாக்கித் தருகின்ற இறைவனுக்கு இந்த ஒருசிறிய அளவான தியாகத்தை

யாவது நாம் செய்ய வேண்டுவது இன்றியமையாததாகும். அத்தகைய தியாக உணர்வை இறைவனும் நமது உள்ளத்தில் தோற்றுவிக்க நினைக்கின்றான்.

இனி, கோயில்களில் வெள்ளியாலும், பொன்னாலும் குடங்கள் கலசங்கள் முதலியவற்றைச் செய்து வைப்பதும், மூர்த்திகட்குப் பொன்னாலும், இரத்தினத்தாலும் திருவாபரணங்களும், கவசங்களும் செய்து சாத்துவதும் வழிபாட்டு முறையில் மட்டுமன்றிப் பொருளாதார நிலையிலுங்கூட நாட்டிற்கு நல்லதொரு பயனைத் தருவதேயாகும். இது பணத்தை ஓரிடத்தில் முடக்கி வைப்பதாகாது. முற்காலத்தில் பெருஞ்செல்வர் பலரிடம் பணம் பல வகையில் முடங்கியிருந்தது. அது நாடு அல்லல்பட நேர்ந்த காலத்து எவ்வகையிலோ வெளிவந்து உதவிசெய்து கொண்டு தான் இருந்தது. இக்காலத்தில் அந்த நிலை இல்லை. ஆகவே, கோயில்களிலாவது பழைய மரபின்படி அஃது இருப்பின், தக்க சமயத்தில் நாட்டிற்கும் பயன்படும்.

கோயில்களுக்கென்று வைத்திருந்தநெல்லைப்பஞ்சகாலத்தில் மக்களுக்கு வழங்கிப் பின்பு நாடு செழித்த காலத்தில் அதனை ஈடு செய்து கொண்ட செய்திகள் கல்வெட்டுக்களில் காணப் படுகின்றன. ஆலயத்தில் செய்யப்படுகின்ற செலவுகளும் உண்மையில் மக்களுக்கே ஆகின்றன.

பழங்காலத்தில் பொன், வெள்ளி, செம்புகளே பணமாக வழங்கின. இக்காலத்தில் காகிதத்தையும் பணமாக வழங்கும் புதியமுறை உள்ளது. ஆயினும், அது மேற்குறித்த நாணயங்கள் உள்ள அளவிற்கே வழங்கவேண்டும்; அந்த அளவிற்கு மேல் வழங்கக்கூடாது என்பது பொருளாதாரத்திட்டம். ஆனால் நடைமுறையில் அந்தத் திட்டத்தைப் பின்பற்றுவது கடினமாக உள்ளது. இந்நிலையில் கோயில்களிலாவது நாட்டில் ஓரளவு பொன்னும், இரத்தினமும் தங்கியிருத்தல் வேண்டுமன்றோ! ஆகவே, கோயிலின் செல்வத்தை நாட்டின் செல்வமாகவே கருதவேண்டும். மதுரையில் ஸ்ரீ மீனாட்சியம்மைக்குப் பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள வயிர கிரீடம் புதிதாகச் செய்து சாத்தினார்கள் என்றால், அது நாட்டிற்கு அமைந்த நல்லதொரு சேம நிதியே யாகும். மேலும் இது போன்ற பொருள்கள் செய்யப்படுதல் அத்தொழிலையும், தொழிலாளரையும் காப்பாற்றுவதுடன் கலையையும் வளர்ப்பதாகின்றது. இவைகளையெல்லாம் ஒரு மாநிலம், ஒரு நாடு என்பவை மட்டுமன்றி உலக அரசுகள் பலவுமே உணர்ந்து செயலாற்றினால், உலகம் முழுதுமே நல்ல வாழ்வும் வளமும் பெற்று, எங்கும் அமைதிநிலவி இன்பம் நிறைந்து விளங்கும்.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னுகரம்
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 32. இதழ் 5. பக்கம் 256 இன் தொடர்ச்சி )

அந்த அந்த மாதத்திற்குரிய தீர்த்த நக்ஷத்திரமாவது :

சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம்' உத்திரட்டாதி, அசுவனி, கார்த்திகை, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம் என்று சித்திரைமாத முதலான மாதங்களுக்குரிய நக்ஷத்திரங்களாகும். — சந்திரஞானம்.

ஒவ்வொரு மாதமும் திருவாதிரை நக்ஷத்திரத்தையே தீர்த்தநக்ஷத்திரமாகவும் கொள்ளலாம். — சந்திரஞானம்.

சமுத்திர தீர்த்தமானுல் திதிப்ரதானம், (முக்கியம்) மற்றவை நக்ஷத்ரப்ரதானமாகும். — காமிகம்.

திதியும் நக்ஷத்திரமும் சேர்ந்ததினம் உத்தமம். திதியும் நக்ஷத்திரமும் இரண்டு தினத்திலும் கூடியிருந்தால் எந்நாளில்நக்ஷத்திரம் அதிகமாயிருக்கிறதோ அன்று தீர்த்தம் விசேஷம். — காமிகம்.

தீர்த்த நக்ஷத்திரம் இரண்டு நாளிலும் இருந்தாலும் இரண்டு தினத்திலும் பர்வம் கூடியிருந்தாலும் பகலில் என்று நக்ஷத்திரம் அதிகமாகவிருக்கிறதோ அன்றே தீர்த்தம் கொடுக்கவேண்டும். மாத்தியந்தினம், சாயங்காலம், ப்ராதக்காலம், என்ற முக்காலங்களிலும் திதி நக்ஷத்திர சம்யோகமிருந்தால் உதய வியாபியான நக்ஷத்திரம் சிறந்தது.

— சுவாயம்புவம்.

ஒரு மாதத்தில் இரண்டு நக்ஷத்திரம் வந்தால் முன்பு உள்ளதை விட்டுப் பின்பு உள்ளதைக் கொள்ளவேண்டும். ஆனுல் முன்பு உள்ளது திதி நக்ஷத்திரங்களுடன் கூடி

உத்தமமாக இருக்குமேயானுல் முன்பு உள்ளதிலேயே செய்யலாம்,

பர்வத்துடன் கூடியதாக இருந்தாலும் அல்லது பர்வத்துடன் சேராததாக இருந்தாலும் மாத நக்ஷத்திரமே முக்கியமாகும். —சூக்ஷ்மாகமம்.

அரசர்களுடைய ஜன்மநக்ஷத்திரத்தையோ முடிவுதின நக்ஷத்திரம் அல்லது திதியையோ அவருடைய பட்டாபிஷேக நக்ஷத்திரத்தையோ தீர்த்ததினமாக வைத்து உத்சவம் தொடங்கலாம். —காமிகாகமம்.

உத்சவம் என்பது :- சைவம், கௌணம், பௌதிகம், பௌவனம், தைவிகம், பைத்ருகம், கௌமாரம், சாவித்ரம், சாந்திரம், சௌரம், என்ற பத்து பேதங்களையுடையது.

| | | | |
|---|---|---|---|
| சைவம் | என்பது | 1 | நாள் |
| கௌணம் | ,, | 3 | ,, |
| பௌதிகம் | ,, | 5 | ,, |
| பௌவனம் | ,, | 7 | ,, |
| தைவிகம் | ,, | 9 | ,, |
| பைத்ருகம் | ,, | 11 | ,, |
| கௌமாரம் | ,, | 13 | ,, |
| சாவித்ரம் | ,, | 15 | ,, |
| சாந்திரம் | ,, | 17 | ,, |
| சௌரம் | ,, | 27 | ,, |

—உத்தரகாரணுகமம்.

சைவம், பௌதிகம் கௌணம் என்ற மூன்றுவித உத்ஸவத்திற்கும் துவஜாரோஹணம் கிடையாது. பௌவனம், தைவிகம் முதலிய உத்ஸவங்களுக்கு துவஜாரோஹணம் உண்டு.

உத்ஸவத்தின் ஆரம்பம் மூன்றுவிதம். துவஜாரோஹணத்தை முதலாகக்கொண்டது என்றும், அங்குரார்ப்பணத்தை முதலாகக்கொண்டது என்றும், பேரீதாடனத்தை முதலாகக்கொண்டது என்றும் மூவகையாம்.

அதாவது முதலாவது:- த்வஜாரோஹணம் முதலில் செய்து பிறகு பேரீதாடனம் செய்து அதன்பிறகு அங்குரார்ப்பணம் செய்வது.

இரண்டாவது:- முதலில் பேரீதாடனம்செய்து அதன்பிறகு துவஜாரோஹணம் செய்து பிறகு அங்குரார்ப்பணம் செய்வது.

மூன்றுவது:- முதலில் அங்குரார்ப்பணம் செய்து பிறகு பேரீதாடனம் செய்து அதன்பிறகு துவஜாரோஹணம் செய்வது என்று இவ்வாறு உத்சவ ஆரம்பம் மூன்றுவிதமாகும்

துவஜாரோஹணத்திற்கு முதல்நாள் இரவு விருஷாதிவாஸனம் (பூஜையில் வைத்தல்) செய்யவேணடும் அதாவது கொடியில்எழுதப்பட்ட விருஷபதேவனுக்கு ப்ரதிஷ்டைசெய்து ஹோமம் செய்து தேங்காய், கரும்பு, அதிரஸம், மோதகம் பாயசான்னம் இவை நிவேதனம் செய்யவேண்டும்.

கொடிச்சேலையின் நடுவில் வெண்மையான விருஷபத்தை எழுதி அதன்மேல் அஸ்திரதேவரை எழுதி அதன்பக்கத்தில் இரண்டு சாமரம் எழுதவேண்டும், மேல் குடை எழுதவேண்டும். பக்கங்களில் தீபம், தூபம், பாலிகைகள் எழுதவேண்டும்.

காலையில் துவஜாரோஹணம் செய்வது உத்தமம். நடுப்பகலிலும் மாலையிலும், இரவிலும் த்வாஜாரோஹணம் செய்யலாம்.

पीठ गोपुरयोर्मध्ये महामर्यादि मध्यमे ।
वृषाग्रेवाऽथ पीठाग्रे ध्वजस्थापन माचरेत् ॥

பலிபீடத்திற்கும் கோபுரத்திற்கும் மத்தியிலோ விருஷபத்திற்கு முன்னிலையிலோ, பீடத்திற்கும், விருஷபத்திற்கும் நடுவிலேயோ மஹாமர்யாதியின் நடுவில் த்வஜஸ்தம்பத்தைப் பிரதிஷ்டை செய்யவேண்டும்.

புழு பொந்து இல்லாததாயும், போரையற்றதாயும் அந்தஸ்ஸார அழுத்தமான உள்பகுதி உள்ளதாயுமிருக்கும் மரம் மேலானது.

சந்தனம், பொரசு, மூங்கில், பாக்குமரம், பலா, கருங்காலி, வில்வம் இலுப்பை, தேவதாரு முதலிய மரம் சிறந்தது. 30, 20, 12, 10 முழம், என்ற அளவில் உயரமிருக்கலாம்.

பொதுவாக உத்ஸவம் முப்பத்தாறு கிரியைகளை உடையதாகவிருக்கிறது. அதாவது :- 1 துவஜாங்குரம், 2. விருஷயாசம் 3. விருஷப்ரதக்ஷிணம் 4. தண்டசோதனம் 5. துவஜாரோஹணம், 6 கலசாபிஷேகம், 7. தண்டபூஜை 8. அஸ்திரபூஜை 9. பேரியாகம் 10. தேவதாஹ்வானம், 11. நித்யஹோமம், 12. பலிபீடம், 13. வாஸ்துசாந்தி 14. உத்ஸவாங்குரம், 15. ரக்ஷாபந்தனம், 16. யாகபூஜை, 17 ஹோமம், 18 பலி 19. யானம் (வாஹனம்), 20. விதிப்ரமணம், 21. நிராஜனம், 22. நர்த்தனம், 23. யாத்ராஸ்னபனம், 24. விசேஷஹோமம், 25. தீர்த்தாங்குரம், 26. தீர்த்தரக்ஷாபந்தனம், 27. அதிவாசம், 28. தீர்த்தம், 29. அவப்ருதம், 30. பூர்ணாகுதி, 31. யாககும்பாபிஷேகம், 32. ஸ்னபனம், 33. மஹாஹவிர்தானம், 34 தக்ஷிணாதானம், 35. த்வஜாவரோஹணம், 36 பைசாசபலி. விக்னேச்வரபூஜை தனி.

— சூக்ஷ்மாகமம்

இந்த சூக்ஷ்மாகமம் உத்ஸவ கிரியையின் சங்கியையைச் சொல்லிற்று. ஆனால் கிரியையின் வரிசையைச் சொல்லவில்லை. இந்தக் கிரியையின் வரிசை ஸ்ரீமத் அகோர சிவாசாரியரின் உத்ஸவ பத்ததியாலும், ஈசான சிவாசாரியாரின் உத்ஸவ பத்ததியாலும் அறியவேண்டும்

தேவதாஹ்வானம் என்பது :- அஸ்திர தேவரிடத்தில் ருத்ரன், பிரமன் விஷ்ணு, தேவி, லக்ஷ்மி, சரஸ்வதி விநாயகர், சுப்பிரமண்யர் முதலிய மூர்த்திகளை ஆஹ்வானம் (அழைத்து) செய்து உத்ஸவத்தின் பொருட்டு இருக்கச்செய்து வணங்கல்.

( தொடரும் )

# செய்திகள்

### தருமையாதீனத்தில்

## குருமூர்த்த ஆலயங்களின் மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம், ஸ்ரீலஸ்ரீ குரு ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளால் நிறுவப்பெற்று இன்றுகாறும் ஞான ஒளியைப் பரப்பிவருகின்றது. இவ்வாதீனத்தில் அருளாட்சி செலுத்திப் பரிபூரணம் எய்திய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின் குருமூர்த்த ஆலயங்களில் பெரும்பாலான தருமையில் காவிரிக்கரைக்குச் செல்லும் திருமஞ்சனவீதியில் அமைந்துள்ளன. அவற்றுள், பதின்மூன்றுவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், பதினன்காவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், பதினைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இவர்களது குருமூர்த்த ஆலயங்களின் நிர்மாணத் திருப்பணி 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் தொடங்கப்பெற்றது. அத் திருப்பணி இதுபொழுது 26-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் நிறைவெய்தி, பிரமாதீச ஆண்டு சித்திரைத்திங்கள் 27 ஆம் நாள் (9—5—73) புதன்கிழமை காலை 7-மணி அளவில் மகாகும்பாபிஷேகம், திருமுறை முழக்கப், அரகர ஒலி, நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது. இரவு மகாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்தது.

7—5—73 திங்கட்கிழமை இரவு முதல் நான்குகால யாக பூஜைகள் நடைபெற்றன. யாககால பூஜைகளுக்கும், மகா கும்பாபிஷேகம் முதலியவற்றுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். அன்பர்கள் பலர் மகாகும்பாபிஷேக தரிசனம்செய்து இறையருளும் குருவருளும் பெற்றனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்கு திருவருட்பிரசாதம் வழங்கி ஆசி அருளினர்கள். மாலை

நிகழ்த்த மகாபிஷேகத்தின்போது மகாவித்துவான், திரு சி. அருணைவடிவேல் முதலியார், திரு. வி. சபேசன், திரு. வி. சா. குருசாமி தேசிகர். வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் முறையே 13, 14, 15. 22 ஆவது குருமகா சந்நிதானங்களின் அற்புத அருள் வரலாறுகளை விளக்கிப் பேசினார்கள், அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

## தருமையாதீனத் திருக்கோயில்களில்
## சித்திரைத்திங்கட் பெருவிழா

### திருக்கடவூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட் பெருவிழா 8—4—73 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி சிறந்த நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது. 10-4-73 அன்று திருக்கல்யாணமும், 12–4–73 அன்று ரிஷபவாகனத்தில் சகோபுர தரிசனமும் 13-4-73 அன்று காலசம்கார சேவையும், 15-4-73 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 17-4-73 அன்று அமிர்தபுஷ்கரணியில் தீர்த்தம் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. 13—4—73 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி, காலசம்கார தரிசனம் நிகழ்த்தி அன்பர்களுக்கு திருவருட் பிரசாதம் வழங்கி தருமைக்கு மீண்டருளினார்கள். விழா நாட்களில் அறிஞர்கள் பலரின் சமயச் சொற்பொழிவுகள் மாலை 6 மணி அளவில் தொடங்கி நடைபெற்றன. தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத். திருநாவுக்கரசுத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி கூட்டத்தை உடனிருந்து நிகழ்த்தினார்கள்.

### திருவையாற்றில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 8–4–73 முதல் தொடங்கி சித்திரைத்திங்கட் பெருவிழா, சிறந்தநாதசுர இன்னிசை, வாண வேடிக்கைகள் முதலியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது. 12–4–73 அன்று பெருமான் தன்னைத்தான் பூசித்தல், சதுர்முகச் சப்பரக்காட்சி முதலியனவும், 16—4—73 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 17—4—73 அன்று தீர்த்தம் கொடுத்தருளலும் சிறப்பாக நடைபெற்றன.

விழா நாட்களில் நாள்தோறும் மாலை 6 மணி அளவில் அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

19-4-73 அன்று சப்தஸ்தானத் திருவிழா மணவாளக் கோலத்துடன் ஸ்ரீ நந்திகேஸ்வரர் சுயசாம்பிகையுடன் வெட்டி வேர்ச் சிவிகையிலும், ஸ்ரீஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகியாரோடு விசித்திரக்கண்ணாடிச் சிவிகையிலும் எழுந்தருள ஏழூர் வலம்வரும் காட்சியும், மறுநாள் ஸ்ரீஐயாறப்பர் ஆறுஊர்ச் சுவாமிகளுடன் பல்லக்குகளில் ஐயாற்றுக்கோயிலுக்குள்வரும் ஆனந்தக் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

## திருப்பனந்தாளில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 8—4—73 முதல் தொடங்கிய சித்திரைத்திங்கட் பெருவிழா 3—4—73 அன்று துவஜாரோகணமும், 12—4—73 அன்று பெருமான் தன்னைத் தான் அருச்சித்தலும், 14—4—73 அன்று திருக்கல்யாணக் காட்சியும், 16—4—73 அன்று திருத்தேர்த்திருவிழாவும், 17-4-73 அன்று தீர்த்தத் திருவிழாவுமாகச் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் சிறந்த நாதஸ்வர இன்னிசை முதலியவற்றுடன் வீதியுலா சிறப்பாக நிகழ்ந்தது. விழா நாட்களில் அறிஞர்களின் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. 17—4—73 அன்று கொள்ளிடக்கரையில் தீர்த்தம் கொடுத்தருளல் நிகழ்வது சிறப்பு. பெருந்திரளான மக்கள் கலந்துகொள்வர். சென்னை, குமாரி ஆர். கௌரி குழுவினரால் "பார்வதி திருமணம்" இன்னிசைச் சொற்பொழிவாக நிகழ்த்தப்பட்டது.

## சீகாழியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட் பெருவிழா 8—4—73 முதல் தொடங்கி 17—4—73 முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது.

திருமுலைப்பால் திருவிழா :- 9—4—73 அன்று சைவசமயாசாரியர்களுள் ஒருவராகிய திருஞானசம்பந்தருக்கு பிரமதீர்த்தக் கரையில், பெருமான், இடபவாகனரூடராய் எழுந்தருளி, உமையம்மையார் மூலம் ஞானப்பால் ஊட்டியருளிய திருநாள். அன்று, காலையிலேயே தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். பின்னர் திருஞான சம்பந்தப் பெருமானை சிவிகையில் எழுந்தருளச்செய்து, அற்புத விளக்க விரிவுரைகளைத் தொடங்கிவைத்து ஆசி அருளி தேவகோட்டை, திருமுறைப் பண்ணிசைவாணர், திரு. பொ. தியாகராசப் பிள்ளை அவர்களுக்கு "திருமுறைக் கலாநிதி" என்னும் பட்டம் வழங்கியருளினர்கள்,

அடுத்து ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், யாழ்ப்பாணம் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திரு. மு சுந்தரேசம் பிள்ளை, திரு. தெ. ஞானசுந்தரம், திரு. வி. சா. குருசாமிதேசிகர். திரு. சொ. சிங்காரவேலன், திரு வி. சபேசன், திரு, இரா. செல்வக்கணபதி, திரு. ஆர். வேலாயுத ஓதுவார் ஆகியோர் அற்புத விளக்க விரிவுரைகளை நிகழ்த்தினர்கள். பின்னர் பிரம தீர்த்தக் கரையில், உமாதேவியார் ஞானப்பால்அருளியது, பெருமான் இடபாரூடராய்க் காட்சி வழங்கியது ஆகிய காட்சிகளை, ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். அன்பர்கள் பலர் திருவருட் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். விழா நாட்களில் நாள்தோறும் மாலை 6 மணிமுதல் கருத்தரங்கம், பட்டிமண்டபம், கவியரங்கம், இன்னிசைக்கதை, பொம்மலாட்டம், நாட்டிய நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

9—4—73 திங்கட்கிழமை அன்று நிகழ்ந்த கருத்தரங்கத்தை சீகாழி திரு. ஆர். வைத்தியநாத முதலியார் அவர்கள் தொடங்கி வைத்து திருமுலைப்பால் விழாவின் சிறப்பை விளக்கி, திருஞான சம்பந்தர் திருவவதாரத் தலமாகிய சீகாழியில் வசிக்கும் மக்கள் புண்ணியம் செய்தவர்கள் என்று கூறி சொற்பொழிவாளர்களையும் வரவேற்ருர்கள். "அருட்கடலும் அன்புக்கடலும்" என்றதலைப்பில் டாக்டர். திரு. சொ. சிங்காரவேலனுர்அவர்களும், "தொகையும் விரியும்" என்றதலைப்பில் சென்னை திரு. தெ. ஞான சுந்தரம் அவர்களும், விரிவுரையாற்றியபின்னர், யாழ்ப்பாணம், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் "திருஞான சம்பந்தர்" வரலாறு இன்னிசைக் கதையாக நிகழ்த்தப்பட்டது.

10—4—73 செவ்வாய்க்கிழமை அன்று வடலூர் தவத்திரு. ஊரன் அடிகள் அவர்களை நடுவராகக்கொண்டு "திருவருள் பெறுதற்குப் பெரிதும் உதவுவது அன்புநெறியா? அறிவு நெறியா?" என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. அன்பு நெறியே பெரிதும் வேண்டுவது என்ற கட்சியில் திரு. அ. கலியபெருமாள், திரு. இரா. செல்வக்கணபதி, திரு. தி. இராமதாசு, ஆகியோரும், அறிவு நெறியே என்ற கட்சியில்

திரு. அறிவொளி, திரு. வே. கண்ணப்பன், திரு. இராம. சந்தானகிருஷ்ணன் ஆகியோரும் வாதிட்டனர். இருகட்சிகளின் வாதங்களையும் சீர்தூக்கிப்பேசி, திருவருள் பெறுதற்குப் பெரிதும் வேண்டுவது 'அன்பு நெறியே' என்று தீர்ப்பு வழங்கினார்கள்.

11—4—73 புதன்கிழமை அன்று டாக்டர். திரு. சொ. சிங்கார வேலனார் அவர்கள் தலைமையில் "இறைமை" என்பதைப் பொருளாகக் கொண்டு கவியரங்கம் நிகழ்ந்தது. திரு, இரா, செல்வக் கணபதி, திரு. அ. பாலருவாயன், திரு. ம. வே. பசுபதி, கவிஞர் தென்னவன் ஆகியோர் பங்குபற்றி இயற்கை, பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் இவற்றுள் இறைமையை நிலைநாட்டி கவிதையியற்றினர். தலைவர் சங்க இலக்கியங்களுள் இறைமையை நிலைநாட்டி, கவியரங்கில் பங்குபற்றியவர்களின் கவிதைகளையும் பாராட்டிக் கவிதை பாடினார்கள். அடுத்து, தில்லை கணபதி கான நடன சபையினரால் "சிவதாண்டவம்" நாட்டிய நாடகமாக நிகழ்த்திக் காட்டப்பட்டது.

12—4—73 வியாழக்கிழமை அன்று திருச்சி திரு. இரா. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நிகழ்ந்தது. "சாத்திரமும் தோத்திரமும்" என்ற தலைப்பில் திரு. வை. இரத்தினசபாபதி அவர்களும், "சமயமும் வாழ்வும்" என்ற தலைப்பில் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களும் கருத்துரை வழங்கினார்கள். அடுத்து வேலூர் திரு. கே. குணபூஷணம் அவர்களால் "சிறுத்தொண்டர்" வரலாறு இன்னிசைக் கதையாக நிகழ்த்தப் பட்டது.

13—4—73 வெள்ளிக்கிழமை அன்று திருக்கல்யாணத் திருநாளாதலால் மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரால் "வள்ளியம்மை திருமணம்" பொம்மலாட்டமாக நிகழ்த்திக் காட்டப்பட்டது.

14—4—73 சனிக்கிழமை அன்று மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தலைமையில், திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன. தலைவரவர்கள் திருமுறைகளின் பெருமையையும், திருமுறைகள் படிப்பதன் அவசியத்தையும் அவற்றால் நாம் அடையும் பயன்களையும் எடுத்து விளக்கி தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். அடுத்து சீகாழி திரு. எஸ். திருஞானசம்பந்தம், சென்னை திரு. எஸ். ஞானப்பிரகாசம் குழுவினரின் திருமுறை இசையரங்கு நிகழ்த்தப்பெற்றது. பின்னர், பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலாக்காட்சி நடைபெற்றது,

## திருவாரூரில்

# ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜைவிழா

திருத்தொண்டின் நெறிவாழத் திருவவதாரம் செய்த திருநாவுக்கரசு நாயனாரின் சித்திரைச்சதயக் குருபூஜைப் பெருவிழா, அவர் திருவவதாரம்செய்த திருவாரூரில் ஏப்ரல் 16, 17, 18 ஆகிய நாட்களில் மிகச்சிறப்பாக நடந்தேறியது.

நாடோறும் மாதினியார் சிவபூஜை நிலயத்தில் சிவபூஜகர் கள் சிவபூஜை செய்தனர். காலை மாலை அப்பர்சுவாமிகளுக்கும், பசுபதீசுவரருக்கும் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன.

தருமையாதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட திரு. சச்சிதா நந்தம் பிள்ளை சதாபிஷேக நினைவு ஸ்ரீ அப்பர் குருகுலத்தின் சார்பில் நடைபெற்ற குருபூஜை விழாவிற்கு வழக்கம்போல் அன்பர்கள் திரளாக வந்திருந்து வழிபட்டு மகிழ்ந்ததோடு மாகேசுர பூஜைக்கும் சமாராதனைக்குமுரிய பொருள்களை நன்கொடையாக வழங்கி விழாச்சிறக்கத்துணைபுரிந்தனர். மூன்று நாட்களும் திருமுறைப் பாராயணமும், திருமுறை இசையரங்கு களும் சிறப்புற நிகழ்ந்தன.

26-4-73 வியாழன் காலை நடைபெற்ற சிவபூஜகர் மாநாட்டிற் குத் திருச்சி, திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜபிள்ளை பி. ஏ., அவர்கள் தலைமை ஏற்றார்கள். தவத்திரு ஊரன் அடிகள் சிவபூஜையின் சிறப்புப்பற்றியும், திரு. வை. இரத்தினசபாபதி அவர்கள் சிவபூஜை பற்றிய இலக்கியக் குறிப்புக்கள் பற்றியும் உரையாற்றினர்.

அன்று மாலை தவத்திரு. ஊரன் அடிகள் தலைமையில் கூடிய கருத்தரங்கத்தில் திரு. அ. பாலகுருவாயன் 'அப்பர்கண்ட சமய நெறி' பற்றியும், திரு. அ. சாமிஐயா 'அப்பர் புகழ்மாலைகள்' பற்றியும் உரையாற்றினர். இரவு தில்லை கணபதி கான நடன சபையாரின் 'சிவதாண்டவம்' நாட்டிய நாடகம் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொருநாளும் வித்துவான், தவத்திரு. மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்தி னார்கள்.

27—4—73 காலை திரு. மு. சொர்ணம் பிள்ளை அவர்கள் தலைமையில் பண்ணாராய்ச்சி மாநாடு கூடியது. 'இந்தளம்' எனும் பண் ஆய்விற்குக் கொள்ளப்பட்டது பேராசிரியர், திரு. க. வெள்ளைவாரணனார் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த ஓதுவா மூர்த்திகள் பலரும் விவாதத்தில் பங்கேற்றனர். திருவாளர்கள், வேலாயுத ஓதுவார், சுப்பிரமணிய முதலியார், சுவாமிநாதன், கனகசபை பிள்ளை, திருஞானசம்பந்தன், சாமிஜயா தேசிகர், சொக்கலிங்கம், சிவப்பிரகாசம், சட்டைநாத முதலியார், விசுவலிங்கம், சபாபதி, ஞானப்பிரகாசம், இரத்தினசபாபதி மற்றும் பலரும் இந்தளப் பண் ஆய்வில் எழுச்சியோடு கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மாலை நடைபெற்ற கவியரங்கிற்கு டாக்டர், திரு. சொ. சிங்காரவேலனுர் தலைமை ஏற்ருர். 'அப்பர் பெருமானின் ஒன்பான் சுவைகளிலே ஒன்றெடுத்துப் பாடுகின்றேன்'...... எனக் கவிஞர்கள் பலர் இனிய கவிதைகள் வழங்கினர்.

திருவாளர்கள் செல்வக்கணபதி, பசுபதி, ஞானசுந்தரம், முத்துக்குமாரசாமி, நடராசன், கவியபெருமாள், தென்னவன், காந்திமதிநாதன் முதலியோர் முறையே வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, அவலம், உருத்திரம், நகை, சாந்தம் போன்ற இனிய சுவைகளை அப்பர் வாக்கிலிருந்து கண்டெடுத்துக் கொண்டு வந்து கவிதை நலஞ் சேர்த்தனர்.

இரவு மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையாரின் 'இராஜராஜசோழன்' பொம்மலாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

28—4—73 குருபூஜைத் திருநாளன்று தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவாமூருக்கு எழுந்தருளினுர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் முன்னிலையில் ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கு மகாருத்ராபிஷேகம் நடைபெற்றது. திருஞானசம்பந்தம் — ஞானப்பிரகாசம் குழுவினர் அப்பர் நாமாவளி பஜனை நிகழ்த்தினர். பகல் 1 மணி அளவில் ஸ்ரீ அப்பர் சுவாமிகளுக்கு சோடசோபசார தீபாராதனை நடைபெற்றது. ஸ்ரீ அப்பர்பெருமான் சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள், பழம்பெரும் ஓதுவாமூர்த்தியாகிய காளையார்கோயில் திரு. மு. சொர்ணம் பிள்ளை அவர்களுக்குத் "திருமுறைக் கலாநிதி" என்னும் பட்டமளித்துப் பொன்னுடை போர்த்தி ரூ. 501 பணமுடிப்பு வழங்கி ஆசியருளி அன்பர்களுக்கு திருவருட் பிரசாதம் வழங்கியருளினுர்கள். பகல் 1-30 மணிக்கு மாகேஸ்வர பூஜை நடைபெற்றது.

மாலை 7 மணிக்கு, தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் மும்முனைப் பட்டிமண்டபம் நடைபெற்றது

'அப்பர் பெருமான் தொண்டு மிகுதியும் பயன்பட்டது சமயத்திற்கே' என்ற வாதத்தில் திருவாளர்கள் காந்திமதிநாதன், ஆறுமுகனார், தென்னவன் முதலியோரும், 'மொழிக்கே' என்ற வாதத்தில் கலியபெருமாள், வேங்கடபதி, நடராஜன் ஆகியோரும், 'சமுதாயத்திற்கே' என்ற வாதத்தில் ஞானசுந்தரம், முத்துக்குமாரசாமி, செல்வக்கணபதி ஆகியோரும் வாதிட்டனர்.

முதற் சுற்றில் மொழிக் கட்சியை நீக்கிவிட்டு இரண்டாம் சுற்று விவாதத்திற்குப்பின் அப்பர்பெருமான் தொண்டு 'சமுதாயத்திற்கே' என நடுவர் தீர்ப்பு வழங்கினார்கள்.

இரவு 12 மணிக்குத் திருமுறைப் பாராயணம், நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருவீதியுலாக்காட்சி நடைபெற்றது.

மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் ஆயிரக்கணக்கான ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும் கலந்துகொண்டு கண்டும் கேட்டும் அப்பர்பெருமான் திருவருள் பெற்று உய்ந்தனர்.

குத்தாலம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தில் ஸ்ரீ அப்பர் குருபூஜை விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில், மகாசிவராத்திரியன்று 3—3—73 திரு. சி. ப. சிங்காரம் செட்டியார் அவர்கள் தலைமையில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகம் தொடங்கப் பெற்றது. வாரவழிபாட்டுக் கழகச் சார்பில் ஒவ்வொரு மாதத்திலும் கார்த்திகை நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும், அறுபத்துமூவர் திருநக்ஷத்திர நாட்களில் அறுபத்துமூவருக்கும் சிறப்பு வழிபாடு செய்வது என்று தீர்மானிக்கப்பெற்றது.

27—4—73 அன்று திருநாவுக்கரசர் திருநக்ஷத்திரம் (சித்திரைச் சதயம்). ஆதலால் அன்று ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தினர் சார்பில் அறுபான்மும்மை நாயன்மார்களுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. ஸ்ரீ அப்பரின் அற்புத வரலாற்றை, திரு. சி. ப. சிங்காரம் செட்டியார் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். அன்பர்கள் வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

**திரு. K. முத்துஜோதிடர்**

( பிரமாதீசஸூ வைகாசிமீ 1உ முதல் 32உ முடிய )
( 14—5—73 முதல் 14—6—73 முடிய )

வைகாசிமீ முதல்தேதி சோமவாரம், ரிஷபத்தில் ரவி; மாத பிரவேசம். உதயாதி பகல் 19-நாழிகை 23-விநாடியளவில், சிம்ம லக்னத்தில், மூன்றாவது யாமத்தில் வைகாசிமாத பிறப்புக்காக லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் பிரவேசம் செய்கின்றார். ஷ மாதபிரவேச கால பலன், உலகம் சுபிக்ஷமடையும். பிரஜைகளுக்கு எதிர்பாராத பல நன்மைகள் கிடைக்கும்.

குறிப்பு :- பிரவேச காலம் பகல் மூன்றாவது யாமமாதலாலும், அங்காரக திருஷ்டி பிரவேச லக்கினத்துக்கு ஏற்பட்டதாலும் அமைதிக்குறைவுகளும், பல அத்புதங்களும், தெரியும். ஸ்ரீ பகவான் அங்காங்குத் தோன்றி உலகைக் காப்பார்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத்தரும். கிரஹத்தில் மங்களமான காரியங்களும் புதிதாக ஜீவனலாபமும் ஏற்படும். கிரய விக்ரயங்களும் ஏற்படும். இல்லற சுகம் உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். படிப்பு விருத்தியாகும். தொழில் பழக்கம் ஏற்படும், மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். வரவு செலவு சமமாகும், குடும்பம் ஓங்கும். புதன் வியாழன் சுபமாகும்.

## 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். வம்ச விருத்தி ஏற்படும். புத்திரோத்ஸவம் ஏற்படும். ஸ்தாவர

ஜங்கமங்களில் லாபம் கிடைக்கும். படிப்பு விருத்தியாகும். ஸ்திர ஜீவனம் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். சுபமான காரியங்கள் நடக்கும். வியவஹாரம் ஜெயிக்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் அதிகமாகும், கீர்த்திபத்திரம் கிடைக்கும். தெய்வபலம் காக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத்தரும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைக்கும். ஸ்திரமான ஜீவனம் கிடைக்கும். நஷ்டதனம் வந்துசேரும். கடன் தீரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும மிச்ரமான பலனைத் தரும். தொல்லைகள் அதிகமாகும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். மேலோர் பெரியோர்களின் அன்பினல் சகலமும் சுலப சாத்தியமாகும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

7. துலாம் – சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். அடிக்கடி சுபகாரியங்களும் ஏற்பட்டுக்கொண்டு இருக்கும். ஜீவனம் விருத்தியாகும். வெகுகாலமாய்ப் பார்க்காத அனேக அத்புதங்கள் தெரியும். தெய்வசக்தி பிரகாசிக்கும், சகலமும் சாத்தியமாகும். தெய்வபலம் காக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். புதிதாகத் தொழில் ஏற்படும். உலகத்தில் பிரசித்தி உண்டாகும். வியாதி நிவிர்த்தியாகி ஆரோக்யம் உண்டுபண்ணும். கிரஹத்தில் சுபகாரியங்களும் வித்யை விருத்தியும் உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும். மிச்ரமான பலனைத் தரும். கவலை நீங்கும். ஸ்திரமான சுகமான வாஸமும் ஏற்படும்.

ஜீவனம் விருத்தியாகும். வியவஹாரம் ஜெயிக்கும். புதிதான தொழில் பழக்கத்தால் விசேஷ நன்மை உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

## 10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத்தரும். வம்சம் ஓங்கும். உத்தியோகம் மாறுதலோடு மேல்பதவி கிடைக்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். குடும்பம் தழைக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் –பூரட்டாதி-¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். சஞ்சாரம் அதிகமாகும். சகலமான காரியங்களும் தவக்கத்தோடு நடக்கும். சத்ருக்களால் அனேக இடைஞ்சல்கள் ஏற்படும். வியவஹாரம் இருந்துகொண்டே இருக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத்தரும். சகலமான காரியங்களும் ஜெயிக்கும். புதிதாக ஆரம்பிக்கும் காரியங்களும் நன்மையாகவே நடக்கும் நஷ்டமான பொருள் தானுக வந்துசேரும். தெய்வ பலம் முன்னின்று காக்கும். சுபம் உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

மேற்படி வைகாசி மாதத்தில் உள்ள விதை முகூர்த்தங்கள்.

1. வைகாசிமீ 23உ (7—6—73) குருவாரம், மக நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் (காலே மணி 8½-க்கு மேல் 10½-க்குள்) கடக லக்னத்தில் விதை முகூர்த்தம் நடத்த உத்தமம். சுபம்.

2. வைகாசிமீ 31உ (13—6—73) புதன்கிழமை விசாக நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி (காலே 8¼ மணிக்கு மேல் 10¼ மணிக்குள்) கடக லக்னத்தில் விதை முகூர்த்தம் நடத்த உத்தமம். சுபம்.

மேற்படி முகூர்த்தங்கள் விதை முகூர்த்தத்திற்குப் பார்க்கும் முறைப்படி பார்த்து எழுதப்பட்டுள்ளது.